விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 19 திங்கட்கிழமை (02.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை

# தமிழக மீனவர்கள் 29 பேர் கைது



(கொழும்பு) இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்து, மீன்பிடித்த 29 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க....

## வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாழடைந்த வீடொன்றினுள் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட ஆணொருவரின் சடலத்தினை பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் தெற்குப் பகுதியில் மக்கள் குடியிருக்க அனுமதிக்கப்படாத பிரதேசத்தில் உள்ள பாழடைந்த வீடொன்றினுள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று இருப்பதை பொதுமக்கள் அவதானித்துள்ளனர்.

20ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியப் பிரதமர் மோடியால் இலங்கை அரசியலுக்கு அச்சுறுத்தல்

### அரசை எச்சரிக்கிறார் அமைச்சர் விமல்

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு ஒரு அச்சுறுத்தல் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

மோடியும் அவரது புதிய அரசாங்கமும் 13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என அழுத்தம் கொடுத்துள்ளதுடன் இந்த பிரச்சினை தொடர்பில் இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் விமல் மேலும் தெரிவிக்கையில், 13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்குமாறு கூறியுள்ளார்.

இதனால் அதனை அரசாங்கம் வழங்க வேண்டும். இல்லாவிட்டால்,

20ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீதான அழுத்தத்தை இந்தியா பிரயோகிக்க முடியாது

### அதிகாரபகிர்வு குறித்து அமைச்சர் விமல் கருத்து

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு குறித்து இந்தியா, இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

13-ம் திருத்தச் சட்டம் அல்லது அதற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை வழங்குமாறு நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி அரசாங்கம் கோரியுள்ளது. எனினும், இலங்கையின் அதிகாரப் பகிர்வு விவகாரங்களில் இந்தியா ஏதேச்சாதிகாரப் போக்கைப் பின்பற்ற அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நரேந்திர மோடியோ அல்லது வேறும் நாடோ இலங்கை எவ்வாறான அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றை முன வைக்க வேண்டும் என்பதனை நிர்ணயிக்க முடியாது எவ்வாறான

20ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் ஆஸியில் தீமூட்டித் தற்கொலை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் விக்ரோறியா மாநிலத்தில் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தன்னைத் தானே தீமூட்டித் தற்கொலை செய்துள்ளார்.

மெல்பேர்னிலிருந்து நூறு கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள ஜீலோங் நகரில் இச்சம்பவம் நடந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை தன்னைத் தானே தீமூட்டிய நிலையில் வீதியால் சென்றவர்களால் மீட்கப் பட்ட லியோ சீமான்பிள்ளை என்ற இலங்கைத் தமிழ்ப் புகலிடக் கோரிக் கையாளர் பின்னர் உலங்கு வானூர்தி மூலம் மெல்பேர்ன் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டார்.

95 சதவீதம் எரிகாயங்களுக்குள்ளான அவர் உயிருக்குப் போராடிய நிலையில் நேற்றுக் காலை 9.15 மணிக்கு உயிரிழந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தம்மைத் தாமே அழித்துக்கொள்ளும்

20ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளி ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்ட விரோத ஆயுதங் களை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த தகவலையடுத்தே சந்தேக நபரான கண்ணமுத்து யோகராசா (48) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் விடுதலை புலிகள் அமைப்பில் இருக்கும் போது வீரமணி எனறு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்

20ஆம் பக்கம் பார்க்க....

மிகப் பிந்திய அதிரடியான அபூர்வ வரவு

15 நாட்களில் - ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா உங்கள் கைகளில் கிடைக்க சட்ட சம்மந்தமான ஆலோசனை

எம்மவர்கள் பொன் குவிக்கும் வளமிக்க தேசங்களான சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, இத்தாலி போன்ற நாடுகளுக்கான ... விரைவான விசா ஆலோசனை இதுவாகும். வயதெல்லை கிடையாது. கல்வித் தராதரம் எதுவுமேயில்லை. ஆக 6 பேருக்கு மட்டுமே இவ் அரியவாய்ப்பு.

குறிப்பு :- தூதரகங்களிலேயே நேரடியாக விண்ணப்பதாரி விசா பெறுதல். இதன் மூலம் இதன் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப் படுகின்றது.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
7551)

## தந்தையும் மகனும் மர்மமாக உயிரிழப்பு

### வெற்றுக் காணிக்குள் இருந்து சடலங்கள் மீட்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு முள்ளியான் வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள வெற்றுக் காணியொன்றில் இருந்து மர்மமான முறையில் உயிரிழந்த தந்தை மற்றும் மகனின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படிப் பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றிலிருந்த மாமரத்தில் தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் தந்தையின் சடலமும் நிலத்தில் இறந்து கிடந்த நிலையில் 3 வயது மகனின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

இதில் கட்டைக்காட்டைச் சேர்ந்த மரியதாஸ் மகேஸ்வரன் (வயது 26). அவரது மகனான மகேஸ்வரன் அன்ருஜன் (வயது 3) ஆகியோரது சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 5 மணியளவில் இச்சடலங்களை கண்ணுற்ற சிலர் உடனடியாக அருகிலிருந்த இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தினர். பின்னர் இராணுவத்தினரால் மருதங்கேணி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர்.

நேற்று மாலை 3 மணியளவில் சடலங்களை பார்வையிட்ட பருத்தித்துறை மரண

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

union assurance
Trust in your tomorrow, today.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. தங்கராஜா இலங்கேஸ்வரன்

யூனியன் அசூரன்ஸ் யாழ் கிளையில் விற்பனை நிலை அதிகாரியாக சேவையாற்றும் திரு. தங்கராஜா இலங்கேஸ்வரன், அகில இலங்கை ரீதியில் நிறுவனத்தால் நடத்தப்பட்ட வெளிநாட்டு சுற்றுப்பயண போட்டியில் அமோக வெற்றியிட்டு மலேசியா பயண மாவதையிட்டு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் வழங்கி மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர்:
யாழ். பிராந்திய உத்தியோகத்தர்கள்
யூனியன் அசூரன்ஸ்

(6532)

---

பனை ஆராய்ச்சி நிறுவனம்
பனை அபிவிருத்தி சபை
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## பனை ஆராய்ச்சி மாநாடு

பனைவள ஆராய்ச்சி ஊடாக பனைவளம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்

இம்மாநாட்டிற்கு கல்வியாளர்கள், பனம் பொருட்கள் உற்பத்தியாளர்கள், விற்பனை யாளர்கள் மற்றும் பனங்கைத்தொழிலில் பங்கு பெறுவோர் அனைவரும் கலந்து பயன் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரவேசம் இலவசம்**

திகதி - இன்று 02.06.2014 (திங்கட்கிழமை)
நேரம் - காலை 9.00 - ம்மாலை 3.00
இடம் - வீரசிங்கம் மண்டபம்

தொடர்புகளுக்கு :
பனை ஆராய்ச்சி நிறுவனம்
கண்டி வீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. - 0212057065
தொலைநகல் இல. - 0212057066

(சி-7544)

---

# சேவைநலன் பாராட்டு



**திருமதி சறோஜினி பாலசுந்தரம்**
(பகுதித் தலைவர்)

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 16 ஆண்டுகள் ஆசிரிய சேவையாற்றி இன்று 02.06.2014 இல் ஓய்வு பெறும் திருமதி ச.பாலசுந்தரம் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்:**

01.10.1992 - 09.03.1993 - யா/இளவாலை றோ.க.த.க பாடசாலை - ஆசிரியர்
10.03.1993 - 05.01.1997 - யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம் - ஆசிரியர்
06.01.1997 - 08.09.1998 யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் - ஆசிரியர்
09.09.1998 - 02.06.2014 யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - ஆசிரியர்

கல்லூரிச் சமூகம்
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

(6522)

---

தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம் (வ-து)
கொடிகாமம்

## பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தின் கீழ்க்காணும் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

- பதவி:- களஞ்சிய முகாமையாளர் 208/15 வெற்றிடம் 01 (ஆண்பாலார் மட்டும்)
- சம்பள அளவுத்திட்டம்:- 9450-75X10-80X10-11000 (66/2006இன்படி)

**தகைமைகள்**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 16வது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 17வது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம்/க.பொ.த (சாதா ரணதரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம்/சிங்களம்/தமிழ் பாஷை என்ப வற்றினை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி, சம்பந்தப்பட்ட துறை யில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கணிணி அறிவு முக்கியமானதாக கவனத்திற் கொள்ளப்படும்.

குறிப்பு:-

- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 45 வயதுக்கு குறைந்தவராகவும் இருத்தல வேண்டும்.
- சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- சங்கப்பணியாளர்களுக்கும் சங்க எல்லைக்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கங்களில் கடமையாற்றுவோர் விண்ணப்பிப்பதாயின் தாங் கள் தொழில் செய்யும் சங்கத்தினூடாக தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்களை சங்க அலுவலகத்தில் ரூபா 30/ செலு த்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப் பிணை, ரொக்கப்பிணை என்பனவற்றை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:-**

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்க தலைமைக்காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடிதஉறையின் இடதுப்க்க மேல்மூலையில் **"களஞ்சிய முகாமையாளர் 208/15 பதவிக் கான விண்ணப்பம்"** எனக்குறிப்பிட்டு **"பொதுமுகாமையாளர் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை வீதி, கொடிகாமம்"** எனும் முகவரிக்கு 16.06.2014-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**02.06.2014** (சி-7550) **பொது முகாமையாளர்**

---

# மரண அறிவித்தல்



## சபாபதி தியாகராசா

(இளைப்பாறிய பிரதம லிகிதர் - பெருந்தெருக்கள் திணைக்களம்)

ஆலங்குளாய் சண்டிலிப்பாயை பிறப்பி டமாகவும் அராலி மத்தி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி தியாக ராசா நேற்று (01.06.2014) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி தங்கமுத்து தம்பதியர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல் லப்பா பறுவதபத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மா வின் பாசமிகு கணவரும், சிவபாலன் (U.K), சிவராஜன் (பிரான்ஸ்), சிவநேசன், சிவரஞ்ஜனி, சிவரஞ்ஜன் (U.K), சிவகுமார் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபத்திரா (U.K), சந்திரமலர் (பிரான்ஸ்), ஜெக தீஸ்வரி, Dr.சிறிபவானந்தராஜா (பிரதிப்பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கலாஜினி (U.K), சுகந்தா (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகா லட்சுமி, காலஞ்சென்ற இராசலட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்க ளான கந்தையா இரத்தினம் தம்பதியினரின் அன்பு மைத்துனரும், தர்சினி, தர்சன், சிவவைஷ்ணவி, சிவநிஷா, வினோதா, இஷாணி, லக்ஷன், துர்கவி, ஜதீசன், லஷ்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2014) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி புனா வோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி பாடசாலை
[illegible] அராலி மத்தி,
அராலி.

தகவல் :
குடும்பத்தினர்.

(6550)

---

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215[illegible]32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிந்துள்ள பூகோள அரசியல் மாற்றத்தை பயன்படுத்துவோம்

## செல்வம் எம்.பி.அழைப்பு



வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சியே இன்று நடைபெறுகின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள துளசி மண்டபத்தில் நேற்று முன்தினம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடத்திய அனைத்துலக சமூகமும், தமிழ் தேசிய அரசியலும் சமகால பார்வை எனும் அரசியல் கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரின் அடக்குமுறையும் அவர்களின் அட்டகாசமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

எழுந்து நின்று உரிமைக்காக அடக்கு முறைக்கு எதிராக குரல் கொடுக்க முடியாதவாறு அடக்கி ஒடுக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நமக்கு 33 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. தமிழ் மக்களின் அவலக்குரல் ஐக்கிய நாடுகள் சபையின் கதவைத் தட்டி திறக்க வைத்துள்ளது.

மேலும் இந்தியாவில் இன்று வலுவான அரசாங்கம் உருவாகியுள்ளது. இந்திய பிரதமரின் சத்தியப்பிரமாணத்துக்கு சென்றவர்களிடம் இராணுவம் வெளியேற வேண்டும், 13இற்கு அப்பால் சென்று பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற செய்தி சொல்லப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் 37 ஆசனங்களை ஜெயலலிதா பெற்றுள்ளார். இதனால் நமக்கு இன்று சாதகமே ஏற்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பை வலுப்பெறச் செய்யும் வகையில் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று அவர் கூறனார். அபிவிருத்தியின்பால் இனப் பிரச்சினையை தீர்த்து விடமுடியாது. இன்று கிராமப்புறங்களில் எமது நிலம் ஆக்கிரமிக்கப்படுகின்றன. எமது வட மாகாண சபையின் நடவடிக்கைகள் முடக்கி விடப்பட்டுள்ளன. சுதந்திரமாக செயற்பட முடியவில்லை.

மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் வந்து விடுவார்கள் எனக் கூறிக் கூறியே இந்த அடக்கு முறையினை மேற்கொள்கின்றனர். போர்ச் சூழலில் வாழுவது போன்றே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்தியாவுக்குச் சென்றால் 13 இற்கு அப்பால் சென்றும் இனப் பிரச்சினையை தீர்த்து வைப்போம் என்று கூறுகின்றனர். ஆனால் இலங்கையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில்தான் பிரச்சினையை தீர்ப்போம் என்கின்றனர். தென்னாபிரிக்கா தேவையில்லை என்றும் கூறுகின்றனர்.

சரியான சந்தர்ப்பம் இன்று நமக்கு கிடைத்துள்ளது. இதை தவற விடக்கூடாது. தவற விட்டால் தந்தை செல்வா சொன்னது போல தமிழ் மக்களை யாராலும் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டு விடும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பலம்தான் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்கும்.

இன்று இலங்கையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ள மக்களின் பலம், வெளிநாடுகளில் புலம் பெயர்ந்த உறவுகளின் பலம், தமிழ் நாட்டின் பலம் ஆகிய மூன்று சக்திகளும் தமிழ் மக்களின் ஒருமித்த குரலாக ஒன்று சேர்ந்துள்ளது. அடக்கு முறைகளுக்கு எதிராக எமது ஜனநாயக போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அனைத்தையும் செய்யட்டும் என்று நாம் பார்த்துக் கொண்டு இருந்து விடக்கூடாது. அனைவரும் ஒன்று திரண்டு குரல் கொடுக்க வேண்டும்.

இராணுவ அட்டுழியத்தால் ஒரு கூட்டத்தை நடத்த முடியாமலுள்ளது. கூட்டத்தை நடத்தினால் இராணுவ புலனாய் வுத்துறையினர் 25 பேர் அக்கூட்டத்தில் .இருப்பார்கள்.

இவர்கள் கூட்டத்திற்கு வரும் பொது மக்களை தனித்தனியே புகைப்படமெடுத்து அதை பார்த்து அன்றிரவே அவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களை கூட்டத்திற்கு செல்லக் கூடாது என அச்சுறுத்துகின்றனர்.

புனர்வாழ்வு பெற்றவர்களை ஒவ்வொரு நாளும் இராணுவத்தினரை சந்திக்க வருமாறு கோருகின்றனர். சந்திக்க தவறினால் அவர்களை அடித்து எச்சரிக்கின்றனர்.

ஒரு முறைதான் நமக்கு மரணம் வரும். இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் ஒன்றுபட வேண்டும். இணைந்த வடக்கு, கிழக்கில் ஒரு சமஷ்டியே இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# புலிகளை அழித்த மூலதனத்தோடு ஆட்சியை நீடிக்க அரசு விரும்புகிறது

## நீதி அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

எந்தத் தேர்தல் வந்தாலும் முஸ்லிம் காங்கிரஸை எப்படி மடக்குவது என்கின்ற வியூகங்கள் பல்வேறு தரப்பினர்களினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால் அந்த வியூகம் குறித்த சரியான உடன்பாடு இல்லாமல் யாரோடும் முஸ்லிம் காங்கிரஸ் கட்டுவைத்துக் கொள்ளாது என்கின்ற விடயத்தில் முஸ்லிம் மக்கள் தெளிவான நம்பிக்கையோடு இருக்க வேண்டுமென அக்கட்சியின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறையில் நடைபெற்ற அபிவிருத்தி முப்பெரும் விழாவினைத் தொடர்ந்து சம்மாந்துறை பிரதான வீதியில் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று அரசின் சில பங்காளிக் கட்சிகள், அரசாங்கத்திலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறப்போவதான ஒரு படத்தினைக் காட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸை வெளியேற்ற வேண்டும் என்பதில் சிலருக்கு மிக முக்கியமான அவசரமும் அவசியமாக இருப்பதால்தான் ஊடகங்களில் செய்திகளை வெளியிடுகின்றார்கள்.

ஆட்சித் தலைமையோடு முஸ்லிம் காங்கிரஸ் முரண்பட்டுக்கொள்வது என்பது இன்று எதிரணியில் உள்ள சில இடங்களில் எதிர்பார்புக்களை கூட்டியிருக்கலாம். ஆனால் எதிரணியும் தன்னுடைய அரசியலை இன்னும் சரியாக அமைத்துக்கொள்வதற்கு தடுமாறிக்கொண்டிருக்கின்ற நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் மிக நிதானமாகத்தான் செயற்படவேண்டியுள்ளது.

தற்போதைய அரசு, புலிகளை கூண்டோடு அழித்துவிட்டோம் என்கின்ற கோசத்தோடும் அந்த ஒரே சாதனையை மிகப்பெரும் மூலதனமாக வைத்து ஆட்சியை நீடிக்கலாம் என்கின்ற ஆணவத்தோடும் அகங்காரத்தோடும் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கின்றது. அடுத்த தேர்தலில் இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு தற்போது உள்நாட்டு புலிகள் அல்ல. வெளிநாடு என்கின்ற விடயம் தற்போது பேசப்படுகின்றது.

புலிகளை நாட்டிலிருந்து அழித்துவிட்டோம. இருந்தாலும் வெளியேயிருக்கின்ற புலிகளினால் நாட்டிற்கு ஆபத்து. எனவே நாட்டை பாதுகாப்பதற்கு மீண்டும் ஒருமுறை இந்த அரசை விட்டால் வேறுவழியில்லை என தெற்கிலே இருக்கின்ற சிங்கள மக்கள் மத்தியில் உணர்வுகளை தூண்டுகின்ற காலம் இதுவாகும்.இந்தப் பின்னணியில் தான் இன்று சர்வதேசம் எல்லா முயற்சிகளையும் வித்தியாசமாக செய்துகொண்டிரு க்கின்றது. புலிகளினால் வென்று தராதவை களை சர்வதேசம் வென்று தரும் என்கின்ற அதீத நம்பிக்கையில் தமிழ் மக்கள் இன்று உள்ளார்கள்.

வெளிநாடுகளில் இருக்கின்ற புலம்பெயர்ந்த தமிழர்களுடைய அழுத்தத்தின் ஊடாக ஏதாவதொன்றை அடைந்துகொள்ளலாம் என்கின்ற எதிர்பார்ப்பு ஒருசிலருக்கு இருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே அதிகப் பெரும்பான்மையானோர் வெளிநாடுகளிலே கோசம் போடுகின்ற புலம்பெயர்ந்தவர்களுடைய எல்லா விடயங்களையும் செவிசாய்க்கத் தயாராகவில்லை என்பதனை காண முடிகிறது. இந்தச் சூழலிலே தான் அரசாங்கம் அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி விட வேண்டும் என்கின்ற விடயத்தில் நாட்டத்தோடு செயற்பட்டு வருகினறது. எதிர்க்கட்சிகள் சிந்திக்கின்ற மாதிரி அசைக்க முடியாத அரசியல் சக்தியாக உள்ள தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஒரு தனி மனிதரை அல்லது பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இதற்கு எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸை, அரசாங்கம் நினைத்த மாதிரி கையாளலாம் என நினைத்தால் அது மிகப்பெரும் தவறாகும். முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை சுமர்ந்திருக்கின்ற கட்சியாகும். முஸ்லிம் காங்கிரஸ் மிக உறுதி யான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டத் தில் தள்ளப்பட்டிருப்பதோடு எதையும் நிதானம் இழந்து முடிவெடிக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது என்றார். (2)

## இராசி பலன்

**02.06.2014**

**(வைகாசி 19, திங்கட்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**

**பஞ்சமி முழுவதும்**

**பூசம் பின்னிரவு 4.12 மணிவரை**

**இராகுகாலம் 7.22-8.52 மணிவரை**

**சுபநேரம் 11.52-01.22 மணிவரை**

**வளவன்**

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாய் வழியில் அனுகூலமுண்டு, கல்விக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் வந்து நேரலாம்.

**இடபம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**கடகம்:** பயணத்தால் பலன் கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும், திடீர் பயணமொன்று உருவாகலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**கன்னி:** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர்வடையும், தொலை தூரப் பயணங்கள் கைகூடும், உறவினர் வருகையுண்டு.

**துலாம்:** குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு:** எதையும் ஒருமுறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம், செலவுகள் அதிகமாகும், போசன சுகமுண்டு.


**மகரம்:** நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, கௌரவமான நாள், பயணங்கள் தித்திக்க வைக்கும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** கடன் பிரச்சினையைத் தீர்க்க புதிய வழியைக் கையாள்வீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மீனம்:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்கள் இன்று கைகூடும், வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாதத்தில் மொத்த ஏ/தி 1.67 பில். டொலர்களாக பதிவு



ஏப்ரல் மாதத்தில் மொத்த ஏற்றுமதி 1.67 பில்லியன் டொலர்களாக பதிவாகியிருந்ததுடன் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 28.6 வீத அதிகரிப்பாகும்.


முதலாவது காலாண்டில் மொத்த ஏற்றுமதி பெறுமதி என்பது 19.1 வீதத்தால் அதிகரித்து 2.8 பில்லியன டொலர்களாக பதிவாகியிருந்தது.

இதேவேளை ஏப்ரல் மாதத்தில் இறக்குமதி மீதான செலவினம் 8.2 வீத அதிகரிப்பை பதிவு செய்து 1672 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

ஏற்றுமதி அதிகரிப்பில் அதிகளவு பங்களிப்பை தொழிற்றுறை சார் ஏற்றுமதிகளின் மூலம் வழங்கப்பட்டிருந்தன. ஆடைத் தயாரிப்புகள் மற்றும் துணி வகைகள் போன்றவறறின் ஏற்றுமதி 32.6 வீதத்தால் அதிகரித்து 457 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

இறப்பர் உற்பத்திகளான டயர்களின் ஏற்றுமதியிலும் இந்த காலப் பகுதியில் அதிகரிப்பு பதிவாகியிருந்தது.

# வாகனப் பதிவு ஏப்ரலில் சரிவு



ஏப்ரல் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனப் பதிவுகளில் வணிக நோக்கிலான வாகனங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு சரிவை பதிவு செய்திருந்தன. விசேடமாக ட்ரக் ரக வாகனப் பதிவுகளில் சரிவு பதிவாகியிருந்தது. இதேவேளை மோட்டார் சைக்கிள்களின் விற்பனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் அதிகரித்திருந்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் மொத்தமாக 17031 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும், இது 18 வீத அதிகரிப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

மோட்டார் கார் பதிவுகள் கடந்த ஏப்ரல் மாதத்தில் 1977 ஆக பதிவாகியிருந்தது. நடப்பு ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் இந்த பெறுமதி 1917 ஆக பதிவாகியிருந்தது.

முச்சக்கர வண்டி வாகனப் பதிவுகள் என்பது ஏப்ரல் மாதத்தில் 18 வீதத்தால் சரிவடைந்து 6772 அலகுகளாக பதிவாகியிருந்தது.

# அமானா வங்கி விசா டெபிட் அட்டையை அறிமுகப்படுத்தியது




வாடிக்கையாளர் சேவைக்கு மேலும் பெறுமதி சேர்க்கும் வகையில், அமானா வங்கி அண்மையில் வீசா டெபிட் (பற்று) அட்டையை அறிமுகம் செய்துள்ளது. அமானா வங்கியின் முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி பைசல் சாலியும், பிரதான தொழிற்படுத்தல் அதிகாரி முஹம்மத் அஸ்மீரும் முதற் தொகுதி டெபிட் அட்டைகளை வாடிக்கையாளர்களுக்கு கையளித்தார்கள். கொழும்பு-3 இல் உள்ள அமானா வங்கியின் பிரதான அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

டெபிட் அட்டை அறிமுகம் குறித்து கருத்து வெளியிட்ட பைசல் சாலிஹ்,

உலகம் பூராகவும் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளிலும், பிராந்தியங்களிலும் உள்ள 2 மில்லியனுக்கும் மேற்பட்ட ஏ.ரீ.எம் இயந்திரங்களை அணுகும் வசதியை இந்த வீசா டெபிட் அட்டை வழங்கும்.

அமானா வங்கியின் வாடிக்கையாளர்கள் நாடுபூராகவும் உள்ள வங்கியின் 24 கிளைகளில் ஏதாவதொன்றில் ஒரு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து வழங்குவதன் மூலம் ஒரு டெபிட் அட்டையை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

# பான் ஏஷியா வங்கியின் ஓய்வூதியர்களுக்கான சம்மான கடன் திட்டம்

PAN ASIA BANK
At Your Service

இலங்கையில் அதிவிரைவாக வளர்ந்துவரும் முன்னோடி வங்கிகளில் ஒன்றான பான் ஏஷியா வங்கி அரச ஊழியர்களான ஓய்வூதியம் பெறுபவர்களுக்குக்காக சம்மான எனும் கடன்திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தக் கடன் திட்டத்தின் சிறப்பு அம்சமாக பொறுப்புக்களோ பிணைகளோ எதுவும் இன்றி குறைந்த ஆவணங்களுடன் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சம்மான கடன் திட்டத்தின் கீழ் ரூ.500,000 வரை கடன் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் 5 வருட மீள் செலுத்தும் காலம் அத்துடன் 70 வயது வரை கடனை மீள செலுத்தக் கூடிய வசதி இன்னும் பல வசதிகளைக் கொண்டுள்ளதுடன்,

. சம்மான சேமிப்புக் கணக்கின் மேலதிக சலுகைகளாக 8 % வருட வட்டி, ரூ.200 ஆரம்ப வைப்பாக வைப்புச் செய்து கணக்கை ஆரம்பிக்க முடியும்.

அத்துடன் மாதாந்த கட்டணத் தொகை உங்கள் ஓய்வூதியத் தொகையின் 40 % இற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

இச்சலுகை ரூ.10,000இற்கு அதிகமாக மாதாந்த ஓய்வூதிய தொகையைப் பெற்றுக் கொள்பவர்களுக்கே வழங்கப்படும்.

அத்துடன் இந்தக் கடன் திட்டம் தொடர்பாக மேலதிக விபரங்களை பான் ஏசியா வங்கியின் இல. 570. ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கிளையினைத் தொடர்பு கொள்வதன் மூலம் தெரிந்து கொள்ளலாம் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.




# சென்னைப் பங்குச் சந்தையில் வர்த்தகம் முடிவுக்கு வருகிறது




சென்னை பங்குச் சந்தையில் (மெட்ராஸ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச்) பங்கு வர்த்தகம் கடந்த வாரத்துடன் முடிவிற்கு வந்துள்ளது.

பிராந்திய பங்குச் சந்தைகள் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் விற்றுமுதலும் 100 கோடி ரூபாய் சொத்து மதிப்பும் கொண்டிருக்க வேண்டும் என 'செபி இரண்டு ஆண்டுகளுக்கு முன் உத்தரவிட்டது. இந்த விதிமுறையை பின்பற்றுவதற்கு நடப்பாண்டு மே 30-ம் தேதி வரை எம்.எஸ்.இ.இக்கு, அவகாசம் அளிக்கப்பட்டது.

ஆனால் விதிமுறைப்படி விற்றுமுதலை அதிகரிக்க இயலாத காரணததால் எம்.எஸ். இ.இ பங்கு வர்த்தகத்தை நிறுத்த முடிவு செய்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,280.31 | 6,263.46 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,459.43 | 3,454.61 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 4,020.918

**உயர்வடைந்த பங்குகள்(ரூ):** சிலோன் லெதர்(0.30), த பினான்ஸ் கோ(7.50), எஸ்.எம்.பி லீசிங்(0.50), த பினான்ஸ் கோ(14.50), ரோயல் பாம்(33.40).

**சரிவைடைந்த பங்குகள்(ரூ):** லங்கா சென்சுரி(0.20), பரஹன்(611.20), ஜிஎஸ் பினான்ஸ்(41.60), மேர்.ஷிப்பிங்(112.70), செரன்டிப் லான்ட்(863.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# சவால்கள் அதிகம்; சாதிப்பாரா ஜெட்லி?



எதிர்வரும் ஜூலை மாதத்தில் இந்திய மத்திய அரசின் பட்ஜெட் வெளியாகும் என்று கூறப்படுகிறது.

இந்த பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் அருண்ஜெட்லி தாக்கல் செய்வார்.

அதற்காக கடந்த இரு தினங்களில் அவர் நிதியமைச்சகம் மற்றும் தொழில் துறையின் முக்கிய பிரமுகர்களை சந்தித்திருக்கிறார்.

கடந்த காங்., தலைமையிலான கூட்டணி அரசில் நிதியமைச்சராக இருந்த சிதம்பரம், கடைசி நிமிடம் வரை, தன் பதவிக் காலத்தில் செய்த பணிகள், எந்த அளவுக்கு பொருளாதாரத்திற்கு சாதகமாக இல்லை என்பதை பட்ஜெட் வெளிச்சம் போட்டுக் காட்டும்.

அடிப்படை சவால்கள் தவிர, மற்ற பிரச்சினைகள் குறித்து ரிசர்வ் வங்கி கவர்னர் ரகுராம் ராஜனிடம், அமைச்சர் ஜெட்லி ஆலோசித்திருக்கிறார். அதில் வளர்ச்சிக்கான வழிமுறைகள் முக்கியமானது. இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது, முந்தைய நிதியமைச்சர் சிதம்பரம், இன்று சுதந்திரமான மனிதர்.

இதற்கான காரணங்களுக்கு அவர் விடை தர வேண்டிய சூழலும் இல்லை. ஆனால், புதிய நிதியமைச்சர் ஜெட்லி. இவைகளை சமாளித்து, மக்கள் எதிர் பார்ப்புகளுக்கு ஏற்ப பட்ஜெட் தீட்டியாக வேண்டிய அதிக சுமையில் இருக்கிறார்.

**வீண்செலவை விரும்பாதவர்:** பிரதமர் மோடியின், அதிக நம்பிக்கையை பெற்ற ஜெட்லி, சிறந்த வழக்கறிஞர் மட்டும் அல்ல முன், வாஜபாய் அமைச்சரவையில், வர்த்தக அமைச்சராக இருந்து அனுபவம் பெற்றவர். அவர் எப்போதும், தன் நண்பர்களிடம், 'வர்வுக்கு மீறிய செலவு ஆபத்தானது அர்த்தமற்ற செலவை விட, சேமிப்பு மேல்' என்ற கருத்தைக் கூறுவாராம். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, அவர் வெளியிடும் பட்ஜெட், எப்படி அமையப்போகிறது என்ற ஆவல், இப்போது அதிகரித்திருக்கிறது.

## மில். டொலர் வட்டமேசைக்கு செலிங்கோ லைபின் 20 அதிகாரிகள்

உலகின் முன்னணி தரம் மிக்க காப்புறுதி விற்பனைப் பிரதிநிதிகள் பங்கேற்கும் மாநாடான மில்லியன் டொலர் வட்டமேசை மாநாட்டில் (MDRT) கலந்து கொள்ள செலிங்கோ லைஃப்பின் 20 விற்பனை அதிகாரிகள் தகுதி பெற்றுள்ளனர். இந்த அமைப்பு அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயற்படுகின்றது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.00 | 131.88 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 215.09 | 221.25 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 174.52 | 180.23 |
| சுவிஸ் பிராங் | 142.77 | 148.02 |
| கனேடிய டொலர் | 118.41 | 121.66 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.26 | 123.76 |
| சிங்கப்பூர் டொலர் | 102.29 | 105.65 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.21 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.52 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மோடு கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் கைகோர்த்தால் அரசியலில் மாற்றம் ஏற்படும்

## மாவை எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

**கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் எம்மோடு கைகோர்த்து நின்றிருந்தால் இலங்கை அரசியலிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

அனைத்துலக சமூகமும், தமிழ்த் தேசிய அரசியலும் எனும் கருப்பொருளின் கீழ் நேற்று முன்தினம் மட்டக்களப்பு கல்லடியில் அரசியல் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் அண்மையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் அரசு இராணுவமயமாக்கப்பட்ட சூழலில் தேர்தலை நடத்தியிருந்தது. அதிலும் எமது மக்கள் நிதானமாக வாக்களித்துள்ளார்கள்.

எங்களை நாங்கள் ஆளுகின்ற உரிமை இருக்கின்றது. எமது நிலத்தில் எமது ஆட்சி வேண்டும் என்ற இலட்சியத்திற்காக யாழ். மக்கள் தமது பலத்தினை நிலைநாட்டி இருக்கின்றார்கள்.

வடமாகாணசபைத் தேர்தல் நடைபெற்ற பின்னர் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றிருந்தால் அவை இன்னும் தாக்கத்தினைச் செலுத்தியிருக்கும்.

அதற்காக எந்த ஒரு நாடும் ஜனநாயகத் தீர்ப்பில் மட்டும்தான் விடுதலை பெற்றுள்ளது என்பதனை நான் கூறிக் கொள்ளவில்லை, பல நாடுகள் ஆயுதம் ஏந்திப்போராடி தமது சுதந்திரத்தினை நிலைநாட்டியுள்ளன. அது இங்கும் நிகழ முடியும் என நாங்கள் நம்பினோம். அந்தப் பலம் எமக்குக் கட்டியெழுப்பப் பட்டிருந்தது. ஆனால் அதில் முக்கியமான இராஜதந்திர முறைகளைத் தவறியிருந்தாம். நம்பிக்கைகள் நிறைவேறுவதற்கு இராஜதந்திரமும் தேவை என்பூது நியதியாகவுள்ளது.

தந்தை செல்வா தலைமையிலே 67 வழக்கறிஞர்களுடன் வாதாடி நாங்கள் தெரிவித்துக் கொண்டது என்னவென்றால், இந்த இறைமை யாரிடம் இருக்கின்றது என்பது தான் கேள்வி.

இறைமை என்பது மனிதனுடைய பிறப்புரிமை. இறைமை பற்றி அரசியல், அறிவில் ரீதியாகப் பார்க்கின்ற பொழுது மக்களிடம் தான் அது இருக்கின்றது என்பதாகும்.

போரிலே எங்களுடைய சுதந்திரத்தைப் பறித்தெடுத்த நாடுகள், மீண்டும் இந்த நாட்டுக்குச் சுதந்திரம் என்ற பெயரில் உள்ளபோது அந்த சுதந்திரம் எமது மக்களுக்கு திரும்பி விட்டது என்பதுதான் எமது வாதமாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அரசியல் அமைப்புக்கள் உருவாக்கப்பட்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது மக்கள் எமக்குத் தந்த இறைமையினை இந்த அரசாங்கத்திற்கோ வேறு எவருக்குமோ நாங்கள் கொடுக்கவில்லை.

ஜனநாயகத்தின் அடிப்படையில் எம்மிடம் வந்த சுதந்திரம் திரும்பிவிட்டது. எமது, எம்முடைய சம்மதம் இல்லாமல் இந்த ஆட்சி நடைபெறுகின்றது என்பதும், அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதுவும், அது தமிழ் மக்களின் இறைமையினைப் பாதிக்கின்றது என்பதுதான் எமது கருத்தாகும்.

2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எங்களை அழைத்திருந்தது. அது ஒரு அருமையான சந்தர்ப்பம். அத்திணைக்களம் எம்முடன் பேசினார்கள். தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு சரவதேச விசாரணையினைக்கோரவில்லை என சிலர் கதைக்கின்றார்கள், ஊடகங்களிலும் தெரிந்தும் தொரியாதவாறு எழுதிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் அன்று அந்த இராஜாங்கத் திணைக்களத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில இந்த அரசுக்கு ஒரு சர்வதேச விசாரணை வேண்டும் என எழுத்து மூலமாக நாம் கோரியுள்ளோம். இதனை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஐ.நா. சபையிலுள்ள அங்கம் அந்த அங்கங்களிலுள்ள அங்கத்தவர்கள். பொதுச் சபை, பாதுகாப்புச்சபை, மனித உரிமைகள் பேரவை பேன்றவற்றினால்தான் இந்த பிரேரணை உருவாக்கப்பட்டுள்ளன. இவை தனிப்பட்ட ஒரு அரசியற் கட்சியினால் முடியாது.

நவநீதம்பிள்ளையின் அறிக்கையிலும் தாருஷ்மன் அவர்களுடைய அறிக்கையினாலும்தான் இந்த நாட்டிலே மூன்றாவது முறையாக இந்த விசாரணை எடுக்கப்பட்டுள்ளது.

இறுதியில் 2014.03.14 ஆம் திகதி அதிக வாக்குகளால் இலங்கைக்கு சர்வதேச விசாரணை தேவை என நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.நாங்கள் பல விடயங்களை எமது எல்லைக்குட்பட்டு ஆராய்ந்திருக்கின்றோம். 1983 ஆம் அண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி ஒரு மிகப்பெரிய கலவரம் இடம்பெற்று எமது மக்கள் கொல்லப்பட்டார்கள்.

அப்போது எமது தலைவராக அமிர்தலிங்கம் செயற்பட்டு இவ்விடயங்களை மிகவும் துல்லியமாக இந்திய அரசுக்கு எடுத்துரைத்தார். தற்போது அமெரிக்கா, ஐரோப்பா, பிரித்தானியா போன்ற நாடுகள், ஆதரவு தெரிவிக்கன்ற வேளையில், எமது பக்கத்து ஆதாரங்களையும் நியாயங்களையும் திரட்ட வேண்டும்.

நில ஆக்கிரமிப்புக்கள், மனித அழிப்புக்கள் போன்றவற்றோடு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற பல விடயங்களுக்கு இந்த அரசு பதில் சொல்லியே தீரவேண்டும்.

இவைகள் அனைத்தும் ஆவணங்களாக்கப்படல் வேண்டும். இவற்றுக்கான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். தற்போது சர்வதேச விசாரணை பற்றியும், ஏனைய பிற விடயங்கள் பற்றியும் பேசுகின்றோம். ஆனால் கடந்த காலங்களில் இடம்பெற்ற அழிவுகள்,துன்பியல் சம்பவங்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் பற்றியெல்லாம் சரியான ஆவணங்ளை நாங்கள் பதிவு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அது எம்மீதுள்ள ஒரு குற்றமாக மாறிவிடும். அந்த வகையில் 11 ஆயிரத்து 500 சம்பவங்களும் இடங்களும் எம்மிடம் பதிவிலுள்ளன.

பெண்களை பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்துவதை மையப்படுத்தி அறிக்கைகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

சர்வதேச விசாரணை நடக்கும் வேளை அவற்றுக்கான ஆதாரங்களையும் சாட்சியங்களையும் கொடுக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு உண்டு. இன்றும் எவ்வளவோ பாரிய பொறுப்புக்கள் எமக்கு இருக்கின்றன.

சர்வதேச மட்டத்தில எமக்கு வேலை செய்வதற்கு அங்கே ஆட்கள் தேவை. அதேபோல் அதற்கு ஈடாக இந்த ஆவணங்களைத் தயாரிப்பதற்கும் அறிக்கைகளைத் தயார் செய்வதற்கும் இங்கேயும் பொறுப்புமிக்கவர்கள் தேவையாகும். இதற்கு எமது கட்சிக் காரர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது மக்களின் வீடு விடாகச் சென்று கண்ணீர் கதைகளைப் பெறவேண்டியுள்ளது.

இலங்கை- இந்திய ஒப்பந்தம்கூட இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் பிரதிபலித்து நிற்கின்றது என்பதனை நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றோம். அதேபோல் இந்த திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது என்பதும் பல சந்தர்ப்பத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வு காண வேண்டும என்று சொல்லப்படுகின்றது. மாநிலத்திற்கு என்ன அதிகாரம், மத்திய அரசுக்கு என்ன அதிகாரம், முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் என்ன பகிரப்பட வேண்டும்என்றெல்லாம் அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்துங்கள் என்றுதான் இந்தியாவும் சொல்கின்றது.இந் நாட்டிலே இந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமும், இதற்கு முன்னிருந்த சந்திரிக்காவின் அரசாங்கமும், பல சந்தர்ப்பங்களை மழுங்கடித்துள்ளன. சர்வதேச சந்தர்ப்பங்கள் எப்போதும் நீடித்து நிற்பவை அல்ல. இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்த வேண்டும்என அவர் தெரிவித்தார. (2)

## கோத்தபாயவின் அறிவிப்பால்

# கதிகலங்கினாராம் ஆளும் உறுப்பினர்கள்

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது அரசியல் வருகை தொடர்பில் பத்திரிகை ஒன்றில் வெளியிட்ட கருத்து காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது. கோத்தபாயவின் அறிவிப்பால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கதி கலங்கி இருப்பதாக அந்த கட்சியின் உட்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு செயலாளர்கோத்தபாய தேர்தலில் அல்லது தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு வந்தால். நேரடியாக தாம் அவரது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுவோம் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

கோத்தபாயவின் இந்த அறிவிப்பை அடுத்து, ராஜபக்ஷவினரின் குடும்ப ஆட்சிக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந் நிலைமை, குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் தமது கருத்துக்களை பரிமாறிக் கொண்டுள்ளனர். (2)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 23.25 செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: O/L / சொந்த வியாபாரம்
தொ.இ: B/1456

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: 11
தகைமை/தொழில்: சிரேஷ்ட விரிவுரையாளர்
தொ.இ: B/1459

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 8.5
தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்
தொ.இ: B/1460

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 46.25
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்
தொ.இ: B/1463

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: 22 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Business Management (BA Hons)
தொ.இ: G/2061

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 30 செவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc, MSc IT / Manager Shoping Complex (UK - Not PR)
எதிர்பார்ப்பு: PR உள்ள வரன்
தொ.இ: G/2063

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 18 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: College, Nursing – Final year (கனடா - சிற்றிசன்)
தொ.இ: G/2065

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 14 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA / உதவி விரிவுரையாளர்
தொ.இ: G/2068

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களிடம் உறுதி மொழி பெற்றுக்கொள்ள உத்தேசம்?

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஆளும் கட்சி அமைச்சர்களிடம் உறுதிமொழியொன்றை பெற்றுக்கொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தேசித்துள்ளார். மீளவும் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கு நிகராக இந்த உறுதி மொழி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அனைத்து அமைச்சர்களும் கூட்டுப்பொறுப்பு வகிக்க வேண்டுமென வலியுறுத்தி உறுதிமொழி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

இந்தியாவில் அண்மையில் புதிதாக பிரதமர் பதவி ஏற்றுக் கொண்ட நரேந்திர மோடி, தனது அமைச்சர்களிடம் இவ்வாறான ஓர் உறுதிமொழியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அதேவிதமான உறுதிமொழியொன்றை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த உறுதிமொழி குறித்த ஆவணம் அமைச்சர்களிடம் வழங்கப்பட்டு, கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.


அரசாங்கம் என்ற ரீதியில் அமைச்சரவையில் எடுக்கப்பட்டு வரும் சில தீர்மானங்களின் இரகசிய தன்மையை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படவுள்ளது.

அமைச்சரவைக் கூட்டங்களில் அனைவரும் பங்கேற்க வேண்டும் எனவும் அவ்வாறு பங்கேற்கத்தவறும் பட்சத்தில் அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்க வேண்டியது அவசியமானது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பிலான கூட்டுப் பொறுப்பிலிருந்து எவரும் விடுபட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை ஆளும் கட்சி அமைச்சர்கள் அரசிலிருந்து விலகி ஐ.தே.கவில் இணைந்து கொள்ளப் போவதாக அண்மையில் ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து அமைச்சர்கள் யாரேனும் தமது அரசிலிருந்து விலகிவிடுவார்களோ என்ற அச்ச நிலை காரணமாகவே ஜனாதிபதி இந்த முடிபுக்கு வந்துள்ளார் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (2)



உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் வழிகாட்டலில் யாழ். நாவற்குழி மகா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் **எங்கள் சிறுவர் எங்கள் சொத்து** என்னும் தொனிப்பொருளில் சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாக்கும் விழிப்புணர்வு ஆற்றுகையில் ஈடுபட்டனர். ஆற்றுகையில் ஈடுபட்டவர்களை படத்தில் காணலாம். *(படம்:- கொடிகாமம் செய்தியாளர்)*

# விபச்சார விடுதி சுற்றி வளைப்பு

(கொழும்பு)

கொழும்பு ராஜகிரிய புத்கமுவ பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கிய விபச்சார விடுதி ஒன்றை மேல் மாகாண மோசடி தடுப்பு பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் சுற்றி வளைத்தனர்.

விபச்சார விடுதியை நடத்தி வந்த முகாமையாளரான பெண் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபடும் நோக்கில் அங்கிருந்த இரண்டு யுவதிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20, 21 மற்றும் 26 வயதான இளம் பெண்கள் என பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 220 | 250 | 240 |
| தக்காளி | 180 | 140 | 170 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 50 |
| கோவா | 120 | 120 | 100 | 120 |
| கரட் | 120 | 120 | 110 | 160 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 |
| புடோல் | 80 | 60 | 70 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 110 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 160 | 160 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 70 | 100 | 80 | 100 |
| கறிமிளகாய் | 120 | 140 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 120 | 160 |
| போஞ்சி | 160 | 180 | 170 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 80 | 100 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 32

கே.ஏ.அகிம்சன்

**வெளிநாட்டு நண்பர்களே...**

உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்
மணமகள் புகைப்படங்களில்
எங்களின் காதலிகளும் இருக்கிறார்கள்.
கொஞ்சம் விசாரித்துப் பாருங்கள்.
உங்கள் வங்கிக்கணக்குகளில்
நிரம்பியிருக்கும் டொலர்களோடும்
யூரோக்களோடும் எங்கள்
சட்டைப்பையில் இருக்கின்ற
சில்லறைகள் போட்டிபோட
முடியவில்லை.




பாலினி சற்குணம்

**இறந்த பின்னும் தனக்கு உணவளித்த மூதாட்டியை தேடி வரும் பறவை**




ஏகாம்பரன் விஜிதரன்



பெண்களுக்கு பிறந்தவீடு–புகுந்த வீடு–என
இரண்டு வீடுகள் இருக்கும்போது...
ஆண்களுக்கு பெரியவீடு–சின்னவீடு–என
இரண்டு வீடுகள் இருக்கக்கூடாதா...??


அனுஷாந் காந்தன்



**நித்தியானந்தனின் வாழ்க்கைத் தத்துவம்**

1 ஆண் +1 பெண் – ஆனந்தம்
1 ஆண் + 2 பெண்கள்– மஹா ஆனந்தம்
1 ஆண் + 3 பெண்கள்– பரம ஆனந்தம்
1 ஆண் +4 பெண்கள் – பேரானந்தம்
1 ஆண் +பல பெண்கள் – நித்தியானந்தம்

கறொலின் கெனி



கரிஸ் கோகுல்

**இதயத்தில் எத்தனை வலி இருந்தாலும், இனிமையாக பிறரிடம் பேசினால் உலகமே உன்னிடம் பேச ஆசைப்படும்.**

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டத் திருவிழா ஜூன் 22 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் கௌரவ ஜி.ஏ.சந்திரசிறி சிந்தனையிலும் வழி காட்டலிலும் பல்வேறு துறைசார்ந்த கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் வரிசையில் பட்டத்திருவிழா 2014 என்ற மகுடத்தின் கீழ் பட்டம் விடும் திருவிழா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பட்டம் கட்டுதல், அவற்றை அலங்கரித்தல் மற்றும் அவற்றை காற்றில் பறக்கவிடல் என்பன மிகவும் திறன் மிகு செயல் முறையாகும். அத்துடன் மாணவர்களின் மற்றும் இளைஞர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சியை தூண்டும் ஒரு கருவியாகவும் அமைந்துள்ளது.

இவ்விழாவானது எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிலும் அதன் சுற்றாடலிலும் நடைபெறும். மேலும் இந் நிகழ்வு இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டதாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

மேற்படி தினத்தில் காலையில் பட்டம் கட்டுவதற்கான பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் பட்டம் கட்டுவதற்கான பயிற்சிகள் பட்டம் கட்டும் நிபுணத்துவம்.வாய்ந்த கலைஞர்களால் பயிற்சி அழிக்கப்படும்.

அன்றைய தினம் மாலை 100 இற்கு மேற்பட்ட வண்ணப்பட்டங்கள் பல்வேறு உள்ளூர் மற்றும் வெளியூர் நிபுணர்களால் உருவாக்கப்பட்ட பட்டங்கள் பறக்க விடப்படும் எனவும் ஆர்வமுடைய அனைவரையும்பங்கு பற்றி பயனடையுமாறும் ஆளுநர் செயலகம் கேட்டுள்ளது. (அ)

நன்றி:-மிரர்




## மஹோற்சவம்

(கரணவாய்)

வடமராட்சி, கரணவாய் வச்சில் பதி ஸ்ரீ புவனேஸ்வரி பகவதி மாரியம்பாள் திருக்கோவில் மஹோற்சவத் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைலாய வாகன காட்சித் திருவிழாவும் இடம் பெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தேர்த்திரு விழாவும் 13 ஆம் திகதி வெள்ளிக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-60)

---

யாழ்.நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம்இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெற்று 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும் என நீராவி வீரகத்தி வீரகத்தி விநாயகர் ஆலய பொறுப்பதிகாரி வை.இரகுநாத முதலியார் அறிவித்துள்ளார். (2)




## நாடகமும் அரங்கியலும் பாட தயார்ப்படுத்தல் முகாம் இன்று

யாழ் கல்வி வலயத்தினால் இவ்வாண்டில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களில் நாடகமும் அரங்கியலும் பாட தயார்ப்படுத்தல் முகாம் இன்று திங்கட்கிழமை முதல் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ். மத்திய கல்லூரியில் நடை பெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று எலிசபெத் காலம் அறிமுகம், ஒதெல்லோ, யூலிய சீசர், ஐரோப்பிய நாடக வரலாறு 18,19 ஆம் நூற்றாண்டுகளின் சுருக்கம், ஒரு பாவையின் வீடு, நடிபப் பயிற்சிகள் ஆகிய விடயத் தலைப்புக்களில் இடம்பெறவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை இந்திய அரங்கும் நாட்டிய சாஸ்திரமும், நடிப்புக்கோட்பாடுகள், மரபு ஆடல், பாடல்கள் ஆகிய விடயத் தலைப்புக்களிலும் 4 ஆம் திகதி புதன்கிழமை சீன, ஜப்பானிய நாடக மரபு, கிரேக்க நாடக வரலாறு மத்தியகாலம் வரை, அன்ரிக்கனி, நடிப்புப் பயிற்சிகள் ஆகிய பாடங்களும் மறுநாள் வியாழக்கிழமை தமிழ் நாடக வரலாறு, இலங்கை நாடக நவீன வரலாறு, திருக்குற்றால் குறவஞ்சி, அபசுரம், நாடக எழுத்துருவும் நெறியாள்கை ஆகிய பாடங்களும் நடைபெறவுள்ளன.

6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஈழத்து மரபுவழி நாடகங்கள், அலங்கார ரூபன், மரபுவழி ஆடல், பாடல்கள், வேட உடை ஒப்பனை ஆகிய பாட நெறிகள் விரிவான விளக்கங்களுடன் துறைசார்ந்த வளவாளர்களினால் நடத்தப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

எனவே, இப் பாடமுகாமில் இவ்வாண்டு க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து நாடக பாட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் மேலும் அறிவித்துள்ளார். (21)

## விஞ்ஞான கூட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்திற்குஅமைவாகயாழ். வேலணை மத்திய கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள மஹிந்தோதய தொழில் நுட்பவியல் விஞ்ஞானகூடம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் கௌரவபந்துல குணவர்த்தன அழைப்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர்ஜி.ஏ.சந்திரசிறி, பிரதிக்கல்வி அமைச்சர் மொகான் லால் கிரேரோ மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் கலந்து கொண்டு இக் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளனர்.

எனவே, இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஆசிரியர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றம் வேண்டிய ஆசிரியர்களுக்கு மாறாக வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆசிரியர்களால் மேற்கொள்ள இருக்கும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதரவு தெரிவிப்பதாக அதன் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தீவகம் மற்றும் வெளிமாவட்ட கல்வி வலயங்களிலிருந்து யாழ்.கல்வி வலயத்திற்கு ஆசிரியர்களால் இடமாற்றம் கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர்களுக்கு வலிகாமம் கல்வி வலயத்துக்கே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று திங்கட்கிழமை ஆசிரியர்களால் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

மேலும் ஆசிரியர்களது நியாயமான கோரிக்கையை பரிசீலனை செய்து, அவர்கள் விரும்பும் கல்வி வலயத்திலுள்ள கோட்டங்களுக்கு இடமாற்றத்தை வழங்க வேண்டுமெனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் அதில் வலியுறுத்தியுள்ளது. (அ)

## ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்

வன்னி மற்றும் தீவக பிரதேசங்களில் சேவைக்காலத்தை நிறைவு செய்தஆசிரியர்கள்யாழ்.கல்விவலயத்தில் பாடரீதியாக வெற்றிடமாகவுள்ள பாசாலைகளுக்கு நிரப்பப்படவுள்ளனர் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 16 ஆசிரியர்கள் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட கோப்பாய் கோட்டப்பிரிவு பாடசாலைகளுக்கும் ஏனைய ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட பின்னர் வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கும் நியமிக்கப்படவுள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார். (2)

## யோகா பயிற்சி நிலையங்களை பதிவு செய்க

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து யோகா பயிற்சி நிலையங்களையும் இன்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

இந்திய உதவியுடன்யோகாமத்திய பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகவே இப்பதிவை மேற்கொள்வதாகவும்மேலும் யோகாமத்தியபயிற்சி நிலையம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் எதிர்வரும் 4 ஆம் திக்தி புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பதிவு செய்யப்பட்ட யோகா பயிற்சியாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

## அமெ.தகவல் கூடத்தின் புகைப்பட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.அமெரிக்க தகவல் கூடம் (American corner, Jaffna) புகைப்படப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

இதற்கமைய இப்போட்டியானது இரு தலைப்புக்களில் நடத்தப்படவுள்ளது.

நகரின் சுற்றுச் சூழல் மாசு (Environmental Pollution in Jaffna) எனும் தொனிப்பொருளில் 14 வயது தொடக்கம் 19 வயதிற்குட்பட்டவர்களுக்கும் பசுமை நகரத்தை உருவாக்குவோம் (Go Green Jaffna) எனும் தொ்னிப்பொருளில் 19 வயதுக்கு மேற்பட்டவர்களும் இப் போட்டியில் பங்கு பற்றலாம்.

மேலும் போட்டியாளர்கள் தமது புகைப்படங்களை அமெரிக்க தகவல் கூடத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து வழங்குதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு இணைப்பாளர், அமெரிக்க தகவல் கூடம், இல.23, அத்தியடி, புதிய வீதி நல்லூர் என்ற முகவரியுடனோ அல்லது 021 222 0665 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது americancornerjaffna 2011 @gmail.com என்ற மின்னஞ்சல் முகவ ரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ)



சுழிபுரம் பாரதிகலை மன்றத்தின் 32 ஆவது ஆண்டு விழாவும் கலையரங்கு திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிழ்வில் விருந்தினர்ள் அமர்ந்திருப்பதையும் சிறார்களின் காவடி ஆட்ட நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

822

## நீநி ஜீஜுவைச் சந்தித்த டினிகா?



"வீர தேசம்' நீநிஜீஜு ஒரு குட்டிப் பெண் . அவளை நீநி என்றும் அழைக்கலாம். ஜீஜு என்றும் அழைக்கலாம். அவளை நிறையப் பேருக்குப் பிடிக்கும். காரணம் அவள் எல்லோரிடமும் அவ்வளவு அன்போடு பழகுவாள். 'அவளுக்கு மேஜிக்கவுத் தெரியும். ஆனால் அது கொஞ்சம் ரகசியம். அதை எல்லோரிடமும் காட்டிக் கொள்ள மாட்டாள்.

அன்று உடல்நிலை சரியில்லாததால் நீநி பள்ளிக்குச் செல்லவில்லை. வீட்டில் தனியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். அப்போது டொக்... டொக்... எனக் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

அட யாருப்பா இந்த நேரத்தில்? என்றபடியே எழுந்து சென்று கதவைத் திறந்தாள். வாசலில் நான்கு பெரிய்ய்ய்ய கால்கள் மட்டும் தெரிந்தன. தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள் ஜீஜு.

வெளியே பச்சை நிறத்தில் நான்கு மாடி உயரத்துக்கு ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அதன் பற்கள் நம் கை அளவுக்கு இருக்கும். இரண்டு கண்கள். நீண்ட கழுத்து.

ஆனாலும் நீநி பயப்படவில்லை. அவள்தான் எல்லோருக்கும் பிடித்தவளாயிற்றே எதுக்கு பயப்படனும்? அதனால் அந்த உருவத்தை பார்த்து என்னப்பா... என்ன வேண்



டும்? என்று கை காட்டிக் கேட்டாள்.

அதன் தலை நான்கு மாடி உயரத்தில் இருந்ததால் அதற்கு நீநி பேசுவது கேட்கவில்லை. உடனே ஜீஜு பம்பம்போலே பம்பம்போலே என்ற மந்திரத்தை கூறினாள். உடனே அவள் அந்த உருவத்தின் உயரத்துக்கு பெரியவளாக மாறினாள்.

ம்... இப்ப சொல்லு என்ன வேணும் உனக்கு? எதற்கு என்னை எழுப்பினே? என்று கேட்டாள். நான் இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தேன். ரொம்ப பசிக்குது. சாப்பிட ஏதாச்சும் தாயேன் என்றது அது.

தர்றேன். ஆனா நீ இவ்வளவு பெருசா இருந்தா எப்படி வீட்டுக்குள்ளே வருவே? என்று கேட்டாள் நீநி.

அது திகைப்புடன் யோசித்தது. கவலைப்படாதே என்ற நீநி பம்பம்போலே பம்பம்போலே என்ற மந்திரத்தைச் சொல்லி அதன் தலையில் ஒரு குட்டு குட்டினாள். உடனே அது நாய்குட்டி அளவுக்கு மாறிவிட்டது. நீநியும் அவளுடைய சாதாரண உருவத்துக்கு வந்து விட்டாள். வா என வீட்டுக்குள் சென்றாள்.

ஐஸ்கிரீம் சாப்பிடுறியா?

ஐஸ்கிரீமா ...அப்படின்னா?



ஐஸ்கிரீம்னா ஐஸ்கிரீம்தான்;

என்ன சுவையில் இருக்கும்?

ஐஸ்கிரீம் மாதிரிதான் இருக்கும்:

வேற ஏதாச்சும் இருக்கா?

நூடுல்ஸ் சாப்பிடுறியா?

வேணாம். கஞ்சி கிடைக்குமா? என்று கேட்டது அது. நீநிக்கு கஞ்சி வைக்கத் தெரியாது. ஆனாலும் சமையல் புத்தகத்தில் இருந்ததைப் படித்து செய்துவிடலாம் என்ற நம்பிக்கையில்அந்தவிலங்கை உட்காரச் சொல்லிவிட்டு சமையல் அறைக்குச் சென்றாள்.

புத்தகத்தில் சொன்னது மாதிரியே பாத்திரத்தில் தண்ணீர் வைத்து கொஞ்சம் அரிசிபோட்டு கொஞ்சம் உப்பும் போட்டாள் குட்டியான அந்த விலங்குசமையல்அறையின்உள்ளே வந்து திட்டு மீது ஏறி பாத்திரத்தை ஆர்வமாகப் பார்த்தது. சீக்கிரம் தயாராகாதா என்று கேட்டது.

அப்போ கொதகொத குள்ளா... கொதகொத குள்ளா,னு சொல்லிட்டு இரு. சீக்கீரம் தயாராகிடும் என்றாள் நீநி.

அந்த விலங்கும் கொதகொத குள்ளா...கொத கொத குள்ளானு சொல்லிக்கொண்டே இருந்தது. கஞ்சியும் சீக்கீரம் தயாரானது.

அந்த சூடான பாத்திரத்தை துணியால் பிடித்து எடுத்து வந்து முன் அறையில் வைத்த நீநி சூடு குறைய ஒரு கரண்டியால் துழாவினாள்.

ஆமா நீ யாரு? எங்கிருந்து வர்றே என்று கேட்டாள். எங்களை டைனோசர்னு கூப்பிடுவாங்க. நான் ஆறரைக்கோடி வருஷத்துக்கு முன்னாடி இருந்து வர்றேன்.

இப்போ ஊர் உலகம் எப்படி இருக்குனு பார்க்கலாம்,னு வந்தேன் என்றது அது. ஓ...நீதான் டைனோசரா? உன் பேரு என்ன டைனோசர் என்று கேட்டாள் நீநி.

பேரா அப்படினா?

எனக்கு நீநிஜீஜுனு பேரு. எங்க அப்பா, அம்மா, ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் நீநி,னு கூப்பிடுவாங்க.

உன்னை எப்படி கூப்பிடுவாங்க? என்று கேட்டாள். எனக்கு பேரு எல்லாம் இல்லை.

நீயே ஒரு பேரு வையேன் என்றது டைனோசர்.

நீநி கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு டினிகா... நல்லா இருக்கா? என்றாள். டினிகா... நல்லா இருக்கே என்றது அது குஷியாக.

அதற்குள் கஞ்சி ஆறியிருந்தது. டினிகா அதனை ருசித்துக் குடித்தது.

நேரமாச்சு நான் கிளம்புறேன் என்று சொல்லிவிட்டுக் கிளம்பியது டினிகா.

நீநிஜீஜுவும் உறங்கச் சென்றுவிட்டாள்.

கொஞ்ச நேரத்தில் டொக்... டொக்... என்று மீண்டும் கதவு தட்டப்பட்டது. திறந்து பார்த்தால், மீண்டும் டினிகா. இப்ப என்னப்பா? என்று கேட்டாள் நீநி .



என்னைக் குட்டியா மாத்தினியே... திரும்ப பெருசா மாத்து. எங்க கூட்டத்துல என்னைச் சேர்த்துக்க மாட்டேங்கிறாங்க என்றது டைனோசர். ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்... ஸாரிப்பா மறந்தே போயிட்டேன் என்ற நீநிஜீஜு மந்திரத்தை சொன்னாள். பம்பம் போலே பம்பம்போலே...

☆☆☆☆☆☆☆☆☆☆☆

## 02 06.2014 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1615 - பிரெஞ்சு கத்தோலிக்க மதப் பரப்புனர்களின் முதற்தொகுதியினர் கனடாவில் கியூபெக் நகரை அடைந்தனர்.
- 1896 - மார்க்கோனி தான் புதிதாகக் கண்டுபிடித்த வானொலிக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1924 - ஐக்கிய அமெரிக்காவில் பிறந்த அனைத்து பழங்குடிகளுக்கும் அமெரிக்கக் குடியுரிமை வழங்கும் சட்டமூலத்தை ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் அறிமுகப்படுத்தினார்.
- 1946 - இத்தாலியில் முடியாட்சியை குடியரசாக மாற்றும் முடிபுக்கு மக்கள் பெருமளவு ஆதரித்து வாக்களித்தனர். இத்தாலியின் மன்னன் நாட்டை விட்டு வெளியேறினான்.
- 1953 - இரண்டாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டு விழா முதற்தடவையாக தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பானது.
- 1966 - நாசாவின் சேர்வெயர் 1 விண்கலம் சந்திரனில் இறங்கியது. சந்திரனில் மெதுவாக இறங்கிய முதலாவது அமெரிக்க விண்கலம் இதுவாகும்.
- 1992 - டென்மார்க் மக்கள் மாஸ்ட்ரிக்ட் உடன்பாட்டுக்கு எதிர்த்து வாக்களித்தனர்.
- 1999 - பூட்டானில் முதற் தடவையாக தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2003 - வேறொரு கோளுக்கான (செவ்வாய்) மார்ஸ் எக்ஸ்பிரஸ் என்ற தனது முதலாவது விண்கலத்தை ஐரோப்பிய ஆய்வு மையம் ஈசா கசகஸ்தானிலிருந்து ஏவியது.

### பிறப்புகள்

- 1965 - ஸ்டீவ் வா மற்றும் மார்க் வா, ஆஸ்திரேலிய துடுபபாட்டக்காரர்கள்.

### இறப்புகள்

- 1842 - பி. கந்தப்பிள்ளை, யாழ்ப்பாணப் புலவர், வைத்தியர், நாவலரின் தந்தை.
- 1882 - கரிபால்டி, நவீன இத்தாலியை உருவாக்கியவர். (பி. 1807)
- 1981 - தாவீது அடிகள், யாழ்ப்பாணத் தமிழறிஞர் (பி. 1907)

### மார்க்கோனி



வானொலியையும், கம்பியில்லாத் தந்தி முறையையும் உலகுக்குத் தந்த அவர்தான் "வானொலியின் தந்தை" என போற்றப்படும் மார்க்கோனி. 1874-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள் இத்தாலியின் பொலொனா நகரில் பிறந்தார் குலீல்மோ மார்க்கோனி. தந்தை வசதி வாய்ந்த தொழிலதிபதிர். எனவே மார்க்கோனிக்கு மிகச்சிறந்த கல்வி வழுங்கப்பட்டது. வீட்டிலேயே தந்தை உருவாக்கியிருந்த சிறிய நூலகத்திலிருக்கும் புத்தகங்களை படித்து மகிழ்வதுதான் மார்க்கோனியின் பிள்ளைப்பருவ பொழுதுபோக்கு.

வானொலி என்ற சக்தி வாய்ந்த ஆயுதத்தை உலகுக்குத் தந்த மார்க்கோனி 1937-ஆம் ஆண்டு ஜீலை 20-ஆம் நாள் தமது 63-ஆவது அகவையில் ரோம் நகரில் காலமானார்.

சுமார் எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக உலக மக்களை மகிழ்வித்து வந்திருக்கிறது வானொலி. வெறும் பொழுதுபோக்கு சாதனமாக மட்டுமின்றி தகவல் களஞ்சியமாகவும் அது செயற்பட்டு வருகிறது. தொலைக்காட்சி, இணையம் என்று பல தொடர்பு சாதனங்கள் வந்தாலும் இன்றும் பலரது வாழ்க்கையில் வானொலிக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. வானொலியில் ஒரு நல்ல நிகழ்ச்சியை கேட்ட பிறகு நன்றி சொல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள் உண்மையில் மார்க்கோனிக்குதான் நன்றி சொல்ல வேண்டும்.

மார்க்கோனியின் விடாமுயற்சியால்தான் அதுவரை நிசப்தமாக இருந்த வானம் அதன் பிறகு குரல் மூலமும், இசை மூலமும் பேசத் தொடங்கியது. வான் அலைகளுக்கு உயிரூட்டிய மார்க்கோனியின் கதை நமக்கு சொல்லும் உண்மை எளிதானதுதான் தொலைநோக்கும் விடாமுயற்சியுடன் சேர்ந்த கடின உழைப்பும் இருந்தால் எதனையும் சாதிக்கலாம். இதே பண்புகளை பின்பற்றும் எவருக்கும் அந்த வானம் நிச்சயம் வசப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**55/100**

**வருகிற இடமோ மூன்று! வந்திடும் வெற்றியே சான்று! கலகலப்பாகப் பேசிக் காரியங்களை சாதித்துக் கொள்ளும் இடப இராசிநேயர்களே!**

வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும் நேரம் வந்துவிட்டது. வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வந்துவிட்டது குருப்பெயர்ச்சி. இனி உங்கள் வாட்டங்கள் அகலும். இதுவரை இரண்டாம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். வெற்றிகள் ஸ்தானம் என்று வர்ணிக்கப்படுகிற இடத்தில் குரு சஞ்சரிக்கும்பொழுது வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வந்து சேரும். எனவே, வைகாசி 30 முதல் வசந்தம் வரப் போகிறது.

குரு பார்க்க கோடி நன்மை என்பது பழமொழி. 'ஆனால், உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதனாக சுக்ரன் இருப்பதால், அவனுக்கு பகைக் கிரகமான குரு எப்படி பார்வை பலத்தால் நன்மைகள் வழங்குவார் என்று நீங்கள் நினைக்கலாம். அதுவும் இந்த முறை குருப்பெயர்ச்சி கடகத்தில் நிகழும் பொழுது உச்ச குருவாக விளங்குகிறார். பகைவன் வலிமை அடைந்தாலும் பாரபட்சமில்லாமல் அவர் பார்க்கும் இடங்களுக்கெல்லாம் பலன் தருவார்.

மேலும் அவர் பகை வீட்டில் இருந்தபடியே பார்வையை செலுத்தவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். நட்புக் கிரக வீட்டிலிருந்து பார்ப்பதால் அதன் பார்வைக்கு நல்ல பலன்களே வந்து சேரும் என்று சொல்லலாம்.

**வசீகர தோற்றத்திற்கு சொந்தக்காரர்கள்!**

பேச்சுத்திறமை சுக்ர பலத்தால் உங்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாம். மிக அழகாகவும் பேசுவீர்கள். ஆறுதலாகவும் பேசுவீர்கள்.

உங்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் உங்களை மறக்க மாட்டார்கள். மற்றவர்கள் வலிய வந்து நெருங்கிப் பேசும் வாய்ப்பைப் பெற்றவர்கள் நீங்கள்தான். அனுபவ அறிவு உங்களுக்கு அதிகம் இருப்பதால் எப்பொழுதும் உங்களைச் சுற்றி ஒரு கூட்டம் இருந்து கொண்டேயிருக்கும். நட்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் உங்களுக்கு இந்த குருப்

# வருகிற இடமோ மூன்று! வந்திடும் வெற்றியே சான்று!

பெயர்ச்சி தரும் பலன்கள் பற்றிப் பார்ப்போம்.

பொன்னவன் மூன்றில் நின்றால்
பொறுப்புகள் அதிகரிக்கும்!
எண்ணிய காரியங்கள்
எல்லாமே வெற்றியாகும்!
தன்னலம் மாறிப்போகும்!
஢தரியம் வந்துசேரும்!
மண்ணிலே பதவி வாய்க்கும்
மகத்தான வாழ்வும் கூடும்

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது தன்னம்பிக்கையுடனும் ஢தரியத்துடனும் செயற்பட்டு வாழ்வில் வெற்றியை வரவழைத்துக்கொள்ளப்போகிறீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

குரு மூன்றாம் இடத்தில் இருந்துகொண்டு அதன் பார்வையினால் 7,9,11 ஆகிய இடங்களைப் பார்த்துப் புனிதப்படுத்துகிறார். நவக்கிரகத்தில் குருவின் பார்வை ஒன்றிற்குதான் தீய சக்திகளை தூய சக்திகளாக மாற்றும் ஆற்றல் உண்டு.

எனவே, களத்திர ஸ்தானம், பாக்கிய ஸ்தானம், லாப ஸ்தானம் ஆகியவை வைகாசி 30 இற்கு மேல் குரு பார்வையால் புனிதமடைந்து கொண்டாட்டங்களையும் கூடுதல் லாபங்களையும் உங்களுக்கு கொடுக்கப் போகிறது.

**ஏழினை குருதான் பார்த்தால்,**
**இல்லறம் சிறப்பாய் வாய்க்கும்!**
**ஒன்பதைக் குருதான் பார்த்தால்**
**ஒளிமயம் வாழ்வில் சேரும்!**
**பதினொன்றை குருதான் பார்த்தால்**
**பணத்தேவை பூர்த்தியாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது திருமண வாய்ப்புகள் கைகூடவில்லையே 'என்று ஏங்கியவர்களுக்கு நல்ல தகவல் இல்லம் தேடி வரப்போகின்றன. குடும்பத்தில் நிகழாமல் இருந்த சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறத் தொடங்கும்.

செலவிற்கேற்ற வருமானம் வரவில்லை என்று கவலைப்பட்டவர்கள் இனி கவலைப்பட வேண்டியதில்லை. குடும்பச்சுமை எவ்வளவு கூடினாலும் கடுமையான பற்றாக்குறை வந்தாலும் கைகொடுத்து உதவ நண்பர்களும், நல்லவர்களும் முன்வருவர். அந்நிய தேசத் தொடர்பு அனுகூலம் தரும். அங்குள்ளவர்களின் தொடர்பால் புதிய தொழிலுக்கு கூட ஒரு சிலர் அஸ்திபாரம் அமைத்துக் கொள்வர்.

குரு லாப ஸ்தானத்தைப் பார்க்கும் காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம். லாப ஸ்தானம் புனிதமடையும் நேரத்தில் உத்தியோகம் நீங்கலாக சுய தொழில் ஒன்றும் உருவாகலாம். அதன்மூலம் மிதமிஞ்சிய பொருளாதாரம் வந்து சேரலாம். எனவே, மனைவி மக்கள் பெயரில் தொழில் தொடங்கும் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வீர்கள்.

# இடபம்



இதுவரை உங்களுக்கு ஒத்துப் போகாதவர்கள் கூட இப்பொழுது ஒத்துப்போவர். புதிய வாகனங்கள் வாங்கி புன்சிரிப்போடு காட்சியளிப்பீர்கள். 9 ஆம் இடத்தைப் பார்க்கும் குருவால் பொன், பொருட்கள் பெருகும். போட்ட திட்டங்கள் நிறைவேறும். அன்பு நண்பர்கள் உங்கள் அருகில் இருந்து வளர்ச்சிக்கு உறுதுணை புரிவர். இன்பங்கள் எளிதில் வந்துசேரும்.

முன்னோர் வழி சொத்துக்கள் முறையாக கைக்கு கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். வீடு கட்டும் பணி பாதியில் நிற்கிறதே என்று கவலைப்பட்டவர்கள் இனி மீண்டும் கட்டத் தொடங்குவர். திட்டமிட்ட காரியங்கள் சிறப்பாக நடைபெற தெய்வத் திருப்பணிகளிலும் ஆர்வம் கூடும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேர்ந்து வெற்றிப் பாதையை அமைத்துக்கொடுப்பர்.

**சஞ்சாரப் பலன்கள்**

குரு தன் சுய சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை):- குரு உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு பகை கிரகமாக விளங்குவதால் இக்காலத்தில் கொஞ்சம் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லை ஏற்படும். வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலைச்சல் அதிகரிக்கும். வேலைப்பளு கூடும். கடிதப் போக்குவரத்து கசப்பான தகவல் தரலாம். விரயங்கள் அதிகரிக்கும்.

சனி சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை):- மனதில் உற்சாகமும், தன்னம்பிக்கையும் கூடும். உற்றார், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு செயற்படுவீர்கள். அரசு வழியில் சலுகைகள் கிடைத்து ஆனந்தப் படுத்துவீர்கள். நில புலன்களை வாங்கிப் போட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். அசையாத சொத்துக்கள் மட்டுமல்லாமல் ஆபரணங்கள் மற்றும் விலை உயர்ந்த மின்சாதனப்பொருட்களையும் வாங்கிக் குவிக்கும் நேரமிது. சனி உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் என்பதால் இக்காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம். வங்கிச் சேமிப்பு வரலாறு காணாத அளவு உயரும்.

புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை) :- தன வரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். தக்கவிதத்தில் தொழில் முன்னேற்றமும் காண்பீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். வீடு கட்டும் ஆசை பூர்த்தியாகும். பிள்ளைகளால் ஏற்பட்ட வீண் குழப்பங்கள் அகலும். பிரபலஸ்தர்களின் ஒத்துழைப்போடு பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதியும் கடல் தாண்டும் முயற்சி கருதியும் எடுத்த முயற்சி வெற்றி தரும். உத்தியோகம் சம்பந்தமாக பிள்ளைகளுக்கு ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அது கிடைத்து மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கப்போகிறீர்கள்.

**வளர்ச்சி தரும் சிறப்பு வழிபாடு!**

வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். யோக பலம் பெற்ற நாளில் நினைத்ததை நிறைவேற்றும் நெய் நந்தீஸ்வரரை வழிபட்டு வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ளுங்கள்.

**இடப இராசியில் பிறந்த பெண்களுக்கு!**


உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். புத்துணர்ச்சியோடு செயற்படுவீர்கள். குடும்பப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிபிற்கு வரும். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கவலை ஒவ்வொன்றாக அகலும். ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் இப்பொழுது உங்கள் குணமறிந்து நடப்பர். எந்த ஒரு காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஆடம்பர பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

உத்தயோக நலன் கருதி எடுத்த முயற்சிகளில் விண்ணப்பித்தவுடன் வேலை கிடைக்கும் சூழ்நிலை உண்டு. சொந்த வீடு வாங்கி கிரகப்பிரவேசம் செய்ய வேண்டுமென்று நினைத்தவர்கள் குருவின் வக்ர காலத்தில் ஆசைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் வீடு கட்டிக் குடியேறும் வாய்ப்பு கிட்டும். பிரதோஷ காலத்தில் நந்தியெம்பெருமானை வழிபட்டு வருவதன் மூலம் பிரச்சினையிலிருந்து விடுபட இயலும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குரு பகவான் 03.12.2014 முதல் 21.12. 2014 வரை மக நட்சத்திரக்காலில் அதிசாரமாக செல்கின்றார். இக்காலத்தில் தொழில் கூட்டாளிகளிடம் கொஞ்சம் அனுசரித்துச் செல்வது நல்லது. அசையா சொத்துக்களை விற்பனை செய்யும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம். டிசம்பர் 17 முதல் சிம்மத்தில் வக்ர கதியில் இயங்குகிறார். தொடர்ந்து 14.04.2015 வரை குரு வக்ரகதியிலேயே சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை குரு 8,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவர். எனவே, இக்காலத்தில் சில நல்ல காரியங்களையும் முடித்துக் கொடுப்பார்.

தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டேயிருக்கும். தீட்டிய திட்டங்கள் கடைசி நேரத்தில் வெற்றி பெறும். ஆவலோடு வாங்கிய கடன்சுமை ஒவ்வொன்றாக குறையும். ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ள மாற்றுமருத்துவத்தை மேற்கொள்வீர்கள். அதே நேரத்தில் லாபாதிபதியாகவும் குரு விளங்குவதால் கண் முன்னே தெரிகிற லாபம் கைக்கு வராமலேயே போகலாம். பயணங்களில் பிரச்சினைகள் உருவாகும். நீண்ட தூரப்பயணங்கள் கைகூடுவதுபோல் தோன்றி கடைசி நேரத்தில் கைநழுவிப் போகலாம். **நாளை மிதுனம்..........**



**குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்**

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி 13-6-2014 | | வியாழன் |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

***சுப ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014) மாலை 6.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.***

**குருவின் வக்ர காலம்**


- **13.06.2014 முதல் 28.06. 2014 வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக் காலில் குரு. (தனது சாரம்)**
- **29.06. 2014 முதல் 27.08 2014 வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு. (சனி சாரம்)**
- **28.08.2014 முதல் 02. 12.2014 வரை ஆயிலியம் நட்சத்திரக்காலில் குரு. (புதன் சாரம்)**
- **03.12.2014 முதல் 21.12. 2014 வரை மகம் நட்சத்திரக்காலில் குரு அதிசாரமாக செல்கிறார்.**
- **17.12. 2014 முதல் 21.12.2014 வரைகேது சாரத்தில் குரு வக்ர கதி.**
- **22.12. 2014 முதல் 14.04.2015 வரை ஆயிலியம் நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார்.**
- **15.04. 2015 முதல் 04.07.2015 வரை ஆயிலியம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர் கதியில் குரு செல்கிறார்.**
- **05.07. 2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம்

## ((School Base Teacher Development)- SBTD




**பொன்னம்பலம் அருணகிரிநாதன்**
SLEAS III
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
யாழ். கல்வி வலயம் யாழ்ப்பாணம்


மாற்றமும், விருத்தியும் அடைந்துவரும் உலகின் தேவைகளுக்கு பொருத்தமான அறிவாற்றலும், ஆளுமையும், திறன்களும், நல் மனப்பாங்குகளும் கொண்ட மிகச்சிறந்த பரம்பரை ஒன்றை உருவாக்குவதற்கு பெரும் பங்களித்து வரும் ஆசிரியர்களது அறிவாற்றலும், தேர்ச்சிகளும் தேவைக்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட்டும் விருத்தியடைந்து காணப்படுவது இன்றியமையாதது.

மாறிவரும் தகவல் தொழில்நுட்ப நூற்றாண்டில் அனைத்து துறைகளிலும் விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப அறிவும் அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நலிவு கருவி உபகரணங்களும் ஏனைய துறைகளில் பயன்படுத்தப்படுவது போல கல்வித்துறையிலும் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

ஆசிரியற் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது தொழிலுக்கான அறிவை தற்காலப்படுத்துவதோடு தமது தொழிலில் நவீன கருவி உபகரணங்களை பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு தொழில்நுட்ப அறிவையும் கருவிகளை கையாளும் திறமையும் விருத்தி செய்ய வேண்டியுள்ளது.

கலைத்திட்ட மாற்றங்கள், உயர்கல்வித்துறையில் புதிய பாடங்கள் அறிமுகமும், புதிய துறைகளில் அறிமுகம் ஏற்பட்டு வருகின்றன.

மனித வளவிருத்தியில் ஒரு நாட்டின் எல்லைகளை கடந்து மனிதவளம் சர்வதேச கற்கையில் வேலைவாய்ப்புக்களை நோக்கிய நகர்வுகள் இன்று அதிகரித்து வருகிறது. பல்கலைக்கழக பட்டங்கள் கூட பல்வேறு நாடுகளில் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் பட்டங்களை தொடரக்கூடிய நிலைகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு மாணவர்களை வழிப்படுத்தக்கூடிய ஆற்றல்களை கொண்டவர்களாக ஆசிரியர்களை மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு பின்வரும் விடயங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1.கல்வியின் புதிய செல்நெறிகளுக்கும் மாற்றங்களுக்கும் அமைய மீள்பயிற்சி வழங்குதல்.

2.ஆசிரியர்கள் தமது அனுபவங்களைமீள உயர்ந்தெழச்செய்தல்.

3.புத்தறிவினை தேடிப்பெற்றுக் கொள்ளல்.

4.எதிர்பாராத சந்தர்ப்பங்களில் எதிர்பாராத வகையில் தோன்றும் பிரச்சினைகள், அறைகூவல்கள், அனர்த்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளல்.

5.குறிப்பிட்ட நிலைகளை எட்டுதலும் ஆய்வு நிலையில் சிந்தித்தலும்

இத்தகைய ஒரு நிலையில் பாடசாலையில் கல்வி அமைச்சின் துறைசார் விருத்திச்சட்ட செயற்றிட்டத்தின் கீழ் இயங்கும் TESP வேலைத்திட்டத்தினால் பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் புதிய ஒரு வடிவம் பெற்று பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படுகின்றது.(சுற்று நிருப இலக்கம்: 10/2013)

***பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் என்றால் என்ன?***

மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு. பாட இணைச் செயற்பாடுகளின் மூலமாக பல்துறை ஆற்றலும், ஆளுமையும் விருத்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வழிகாட்டி நெறிப்படுத்தக்கூடிய பொறுப்புமிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலை மட்டத்தில்,

I.ஆசிரியர்கள் அபிவிருத்தித் தேவைகளை இனம்காணல்.

II.அதன் அடிப்படையில் திட்டமிடல்

III.வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதான தொடர்ச்சியானதும் ஒருங்கிணைந்ததுமான ஆசிரியர் விருத்தி செயற்பாடுகளை பாடசாலைகளில் செயற்படுத்தலானது பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் எனப்படும். (SBTD)

தற்பொது நடைமுறையில் ஆசிரியர் மேம்பாட்டுக்கான பயிற்சிகள், கருத்தரங்குகள், பயிற்சிநெறிகள் பாடசாலையின் உள்ளும் பாடசாலைக்கு வெளியிலும் பல மட்டங்களில் நடைபெறுகிறது. இவற்றின் நடைமுறைகளும் பயிற்சிகளும் பெற்றுக்கொண்ட அனுபவங்களும் அறிவும் உரிய வகையில் வகுப்பறையில் மாணவர்களை சென்றடைகிறதா? என்பது ஆய்வுக்குரிய விடயமாக மாறியுள்ளது., ஆசிரியர்களின் புதிய வதிபாகத்திற்கான தொடர்ச்சியான வேலைத்திட்டம் தேவையாக உள்ளது.

### SBTD யின் நோக்கம்

1. ஆசிரியர் அபிவிருத்தி பற்றிய புதிய பரிமாணங்கள் கண்டறியப்படவேண்டும்.

2.ஆசிரியர்களின் அபிவிருத்தி - பாடசாலையின் அபிவிருத்தியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3.ஆசிரியர்கள் தமது பணித் தேவைகளை விளங்கிக்கொள்வதை வளப்படுத்தவதுடன், வலுப்படுத்துவதன் முலம் தனிப்பட்ட ஆற்றுகைகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதற்கு அப்பாலும் எடுத்துச் செல்லவேண்டும்.

4.ஆசிரியர்களின் அபிவிருத்தி பாடசாலைகளில் நேர்முகமான மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும்.

5)மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு, ஆற்றுகைத் திறன்கள், கற்றல் அனுபவங்கள் என்பவற்றை மேம்படுத்தல்.

6)ஆசிரியர்களின் அறிவாற்றல் மேம்பாடு, பல்வகை திறன்களின் மேம்பாடு, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றின் மாற்றங்களை உண்டாக்கும் வகையில் பயன்தரக்கூடிய விதத்தில் அமைதல்.

### SBTD யின் தேவை

1.ஆசிரியர் அபிவிருத்தித்திட்டத்தில் ஆசிரியர் வேலை செய்யும் களம் (வகுப்பறை) கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

2.ஆசிரியர்கள் இணைந்து பணியாற்றுவதற்கு அதாவது, அணியாக வேலை செய்வதற்கு ஊக்குவிக்கப்படவும் தூண்டப்படவும் வேண்டும்.

3.ஆசிரியர் அபிவிருத்தி தேசிய கல்விக் கொள்கை பாடசாலையின் நோக்கங்கள், இலக்குகள் என்பவற்றைக் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

4.ஆசிரியர் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஆசிரியர்களை மையமாக கொண்டவையாக இருக்க வேண்டும்.

கூட்டாக வேலை செய்தல்- பங்காளிகளாக செயற்படுதல்

ஒத்திசைவு-நம்பிக்கையுடன் செயற்படுதல்.

குழு வேலை-தெளிவான நோக்கங்களை செயற்படுத்தல்.

மாற்றுச்செயல் முறைகளை முன்னெடுத்தல்- பங்குபற்றுதலும் விளங்கிக் கொள்ளலும்.

5.மாற்றத்தின் உரித்தானவராக தம்மை ஆசிரியர்கள் உருவாக்கிக் கொள்ளல் அவசியமானது.

தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரியர்களுக்கான வேலைத் திட்டங்கள்

01.வெளி வளவாளர்களை அழைத்து 01 நாள் அல்லது 02 நாள் செயலமர்வு.

02.திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் திருப்திகரமான நிலையில் அமையாத கலந்துரையாடல்.

03.இனம் காணப்பட்ட பாடசாலைக்கு விஜயம் செய்தல்.

04.பாடசாலை முகாமைத்துவ குழுவை சந்தித்து கலந்துரையாடல்

05.பண்புத்தர வட்டங்கள்

06.ஆசிரியர் கூட்டங்கள்.

07.வகுப்பறை அனுபவங்களை சமகாலத்தில் கொண்டிராத வளவாளர்கள் போதனை

08.குழுக் கலந்துரையாடல், குழுக்களில் பங்குபற்றும் ஆர்வம் குறைவு, ஒருவர் மட்டும் கருத்துக்களை முன்வைப்பது.

09.தொடர் நடவடிக்கை இன்மை, அமுலாக்கம் பற்றி மதிப்பீடு செய்யப்படாமை.

10.நடைமுறையில் உள்ள ஆசிரியர் வேலைத்திட்டங்கள் பாடசாலையின் தேவையுடன் ஆசிரியரின் தேவையுடன் நேரடியாக தொடர்புபட தவறியுள்ளன.

11.பல்வேறு மட்டங்களிலும் நிறுவனங்கள் பயிற்சியை வழங்குகின்றன. இவை பாடசாலைகளுக்கான குறிப்பான தேவைகளுக்கு பொருந்துபவையாக அமையவில்லை.

12.பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரியமான ஆசிரியர் கல்விச் செயற்பாடுகளின் பயனுறுதித் தன்மை கேள்விக்குறியாக மாறியுள்ளது.

***முன்னெடுக்கப்படவுள்ள பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித்திட்டம்.***

01."நமக்குள் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் ஏனையோரையும் மாற்றுவோம்" என்ற புதிழி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

02.ஆசிரியர்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஆசிரியர் அபிவிருத்திக் கருத்தரங்குகள்

03.ஆசிரியர்/பெற்றோர் கூட்டங்கள், கருத்துப் பகிர்வு பரிமாற்றங்கள்.

04. ஆசிரியர்களின் விருத்திக்கு சந்தர்ப்பம் வழங்கும் பாடசாலை நிகழ்வுகள் ஏற்பாடு செய்தல்.

05.சிரேஷ்ட ஆசிரியர்கள் சக பாடிகளால் அறிவுரைக்கப்படல்.

05.பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தில் (SDP) பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கல்.

***ஆசிரியர் அபிவிருத்தித் திட்டத்தில் எவ்வாறான விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.***

01.வகுப்பறைகளுக்குரிய ஆசிரி யர்களை எவ்வாறு தயார்படுத்துவது.

02.தொடர்ச்சியான வாண்மை விருத்தியூடாக ஆசிரியர் கல்வியை பூரணப்படுத்துதல்.

03.வினைத்திறனும் விளைதிறனும் மிக்க கற்பித்தலுக்கு பொருத்தமான ஆசிரியரை தயார்படுத்துதல், ஆசிரியர்களின் பண்புத்தரத்தை உயர்த்துதல்.

04.ஆய்வுகள், புதிய தொழில்நுட்பங்கள், புதிய அறிவு, புதிய சவால்களை எதிர்கொள்வதற்கு மட்டுமன்றி புதிய உத்திகளையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தும் ஆற்றல்களை வழங்குதல்.

05.வாண்மையை கடப்பாடாக நோக்க வேண்டும் திணிக்கப்பட்டதாக கருதக்கூடாது.

06.வாண்மை திறன்கள், பாட அறிவு இற்றைப்படுத்தப்பட வேண்டும்.

நடைமுறையில் உள்ள ஆசிரியர் கல்வி தொடர்பான கோட்பாடுகள், நடைமுறைகள் தொடர்பாக இடைவெளியில் உள்ளதாக விமர்சிக்கப்படுகிறது. ஆசிரியர்களின் கல்வி/தொழில் தகைமைகள் தொடர்பாகவும் அவர்கள் அன்றாடம் செய்யும் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாகவும் இன்று பல விமர்சனங்கள் முன்வைக்க ப்படுகின்றன. மாணவர்கள் இன்று பாடசாலை-தனியார் போதனை ஆகிய இரு தடங்களில் பயணிக்கிறார்கள்.

ஒரே பாடத்தை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் கற்கிறார்கள். கற்பித்தல் பாங்குகள், கற்பித்தல் சூழல், கற்பித்தல் முறைகள் வேறுபடுவதுடன், கற்றல் பாங்குகள், கற்றல் சூழல், கற்றல் முறைகள் என்பனவும் வேறுபடுகின்றன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



58

...கிராம சமுதாயத்தின் கட்டுமானங்கள்- உறவு நிலைகள்- மக்களின் மனோபாவங்கள்- அரசியல் முரண்பாடுகள்- இலக்கிய வழுக்கல்கள் இவைகள் பற்றியெல்லாம் தாயுமானவர் தலைமையில் பட்டிமன்றம் நடத்திக் கொண்டே பயணம் நிகழும். நான் பெரிய ஆளாக வருவேன் என்று ஜோசியம் சொல்வார் தாயுமானவர். எனது இன்றைய நிலை அவர் அப்போதே எதிர்பார்த்த நிலை என்பதால் அவர் விழிகளில் எப்போதும் வியப்பின் ரேகைகள் விழுந்ததேயில்லை.

ஆனால் இன்று எனது எந்திரகதியான வர்ழ்க்கைக்காக அவர் இரக்கப்படாமல் இல்லை.

ஊருக்குப் போய்த் திரும்பும் ஒவ்வொரு முறையும் "நான் இங்கேயே இருந்து விடுகிறேனே!" என்பேன்.

இப்படியே தென்னை மரங்களோடு பேசிக்கொண்டே இருந்து விடட்டுமா?

ஐஸ்கிரீமின் உச்சியில் குழந்தையால் இன்னும் தின்னப்படாத செர்ரிப் பழத்தைப் போல ஆற்றின் நடுவில் வெள்ளத்தால் இன்னும் தின்னப்படாத அந்த உச்சி மணல் மேட்டில் உட்கார்ந்து கொள்ளட்டுமா?

சந்தியாவந்தனம் செய்யும் ஐயரோடும், மாடோட்டிக் கொண்டு வரும் சிறுவனோடும் தங்கள் பெண்மையை ஆரும் அறிந்து விடாமல் ஆறும் அறிந்து விடாமல் பகிரங்கத்தில் ரகசியமாய்க் குளிக்கும் அந்தப் பாவையரோடும் மனம் விட்டுப் பேசி மகிழட்டுமா?

ஆற்றுக்குள் அயிரை மீன் துரத்திக் கொண்டும், புளியங்காய் அடித்துத் தின்றுகொண்டும், தோப்புக்குள் வெடி தேங்காய் போட்டுக் கொண்டும் 'எழுது' 'எழுது' என்று எழுத்தே என்னை எழுதச் சொல்கிறபோது மட்டும் எழுதிக் கொண்டும், இந்த உழைக்கும் மக்களோடு உறவாடிக் கொண்டும், அவர்களுக்கு உதவிக் கொண்டும் நான் இங்கேயே இருந்து விடட்டுமா? என்று புறப்படும் போதெல்லாம் புலம்புவேன்.




"இல்லை தம்பி! உங்கள் வாட்டம் பெரியது; இன்னும் எவ்வளவோ உங்களிடம் எதிர்பார்க்கிறது இளைஞர் கூட்டம்; புறப்படுங்கள்; போய்க் கடிதம் போடுங்கள்" என்று அழுதுகொண்டே தேற்றுவார் தாயுமானவர்.

நூலகர் வாழ்க்கை என்பது நொந்த வாழ்க்கை.

பணியில் சேர்ந்த சில மாதங்கள் பரவசமிருக்கும்; பிறகுதான் புரியும் அந்தச் செக்கு வாழ்க்கையின் சிரமம்.

அதே நாற்காலி; அதே மேஜை; அதே புத்தகங்கள்; அதே ஓட்டடைகள்; ஒரு வாரமாய் மண்பானையில் அதே தண்ணீர்; அதே வேட்டி சட்டையோடு அதே வாசகர்கள்; தினப்பத்திரிகையும், வாரப் பத்திரிகையும் வராவிட்டால் ஒவ்வொரு நூலகமும் ஒரு முதுமக்கள் தாழிதான். கால் நூற்றாண்டுக்கு மேலாய்த் தாயுமானவர் இதே தொழிலில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை நினைக்கும் போது அவர் மீது மதிப்பும் இரக்கமும் மாறி மாறி வருகின்றன.

நூலகத்துறை திருத்தி அமைக்கப்படாத வரையில் இவர்களுக்கெல்லாம் தீர்வுகள் இல்லை.

தாயுமானவர் நல்ல விமர்சகர்.

ஆனால் அவருடைய தனி மனித விமர்சனம் அன்று; சமூக விமர்சனம்.



என் படைப்புகள் பற்றியும் நடவடிக்கைகள் பற்றியும் ஊர் உலகம் என்ன கருதுகிறது என்பதை ஓட்டெடுப்பு முறையில் ஒட்டுமொத்தமாய் அறிந்து, இடையறாமல் எனக்கு எழுதிக் கொண்டே இருப்பார்.

என்னைத் திருத்திக் கொள்வதிலும் நிறுத்திக் கொள்வதிலும் அந்த விமர்சனங்களுக்குக் கணிசமான பங்கு உண்டு.

ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல நண்பன் என்பார்கள்.

எனக்கோ ஒரு நல்ல நண்பரே புத்தகமாக இருக்கிறார்.

இந்தப் புத்தகம் இன்றோ நாளையோ வாசித்து மூடிவிடும் வழக்கமான புத்தகம் அன்று.

கடைசியில் ஒரு கிறிஸ்தவன் மீது வைக்கப்படும் பைபிள் மாதிரி, ஒரு முஸ்லிம் மீது வைக்கப்படும் குரான் மாதிரி என் வாழ்க்கையில் கடைசி வரை வந்து கொண்டேயிருக்கிற புத்தகம்.

*(தொடரும்)*

-வைரமுத்து-

# தமிழ் மக்களுக்கு சமவுரிமை வழங்கும் புதிய அரசியலமைப்பு நாட்டிற்கு அவசியம்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசாங்கம் வடமாகாண சபையுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமே தமிழ் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் கொண்டு வர முடியும். குறிப்பாக சிவிலியன் ஒருவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என அமைச்சர் வாசுதேச நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

வடமாகாண சபைக்கான முதன்மைச் செயலாளரை நியமிக்கும் போதும் அம்மாகாணத்திற்கான பொலிஸ் அத்தியட்சகரை நியமிக்கும் போதும் மத்திய அரசாங்கம் மாகாண முதலமைச்சருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாட்டுடன் இப்பதவிகளுக்கானவர்களை நியமிக்க வேண்டுமெனபது தான் நியாயம் என அவர் கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்

13ஆவது திருத்தத்தை முன்னெடுக்க வேண்டுமென்று இந்தியாவோ அல்லது வேறெந்த நாடுகளோ எம்மீது அழுத்தம் கொடுக்க முடியாது.

தேசியப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்துள்ளார். இக் குழுவில் அனைவரது கருத்துக்களும் முன் வைக்கப்பட்டு விவாதம் மேற்கொள்ளப்பட்டு இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்படும். அவ்வாறு எடுக்கப்படும் தீர்மானமே நிலைத்திருக்கக் கூடிய தீர்வாக அமையும்.

13 ஆவது திருத்தத்திலும் இது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் வடமாகாண சபை தொடர்பில் இந்தச் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

அத்துடன் வடமாகாண சபையுடன் நல்லுறவுடன் செயற்படாமல் முதலமைச்சருக்கான அதிகாரங்களையும் வழங்காமல் உள்ளது.

வடமாகாண ஆளுநராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியே உள்ளார். இது மாற்றப்பட வேண்டும். சிவிலியன் ஒருவரே ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும். அத்துடன் 13வது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை வடமாகாண சபைக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு வடமாகாண சபையுடன் நல்லுறவு இல்லாதவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் வர சம்மதிக்கமாட்டார்கள்.

நாட்டில் இனவாத சக்திகளின் அதிகாரப்பரவலாக்கலை இல்லாதொழிக்கும் அரசியலமைப்பு எமக்கு தேவை. தமிழ் மக்களுக்கு சமவுரிமை வழங்கும் புதிய அரசியலமைப்பு நாட்டுக்கு அவசியமானது.

அதிகாரப்பரவலாக்கலை வழங்கினால் நாடு பிரியும் என்பது பாம்புப் புற்றுக்குள் செல்லும் போதே அதற்குள் பாம்பு இருப்பதாக ஆரூடம் சொல்வது போலானதாகும் என்றும் அவர் தெரிவித்தார். (2)

# காலாவதியான சொக்கலேட் மீட்பு

(கொழும்பு)

100 மில்லியன் ரூபா பெறுமதியுடைய காலாவதியான சொக்கலேட் தொகையை நுகர்வோர் அதிகாரசபையைச் சேர்ந்த அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சீதுவை பிரதேசத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே இந்த சொக்கலேட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகாரசபையினர் தெரிவித்தனர்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த சொக்கலேட்டுகள், 18 மாதங்களுக்கு முன்னரே காலாவதியானவை என அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (2)

# கழுதைகள் சிறந்தவை; ஜே.வி.பிக்கு அஸ்வர் பதில்

புத்தளம் கழுதைக்கு இருக்கும் அறிவு கூட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வருக்கு இல்லை என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் அந்துன்நெத்தி தெரிவித்திருந்தமைக்கு அஸ்வர் பதிலளித்துள்ளார்.

அது குறித்து அஸ்வர் மேலும் தெரிவிக்கையில்,

கொலைகளை செய்த கொலைகாரர்களை விட கழுதைகள் மிகவும் சிறந்தவை. ஜே.வி.பியினர் இந்த நாட்டை அழித்தவர்கள். எனக்கு அது பற்றி கவலையில்லை. எவ்வாறாயினும் கொலைக்காரர்களை விட கழுதைகள் சிறந்தவை என அவர் கூறியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு துருவங்களின் சந்திப்பு!

**மோடி-** ஷெரீஃப் சந்திப்புக்கு இரு நாடுகளிலும் எதிர்ப்புக்கள் இருந்தாலும் நல்லுறவுக்கு அவசியமான சந்திப்பு இது!

புதிய அரசின் பதவியேற்பு நிகழ்ச்சிக்கு வருமாறு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீஃப்புக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தபோது, சர்வதேச அரங்கிலேயே அநேகப் புருவங்கள் நெரிந்தன: காரணம் இல்லாமல் இல்லை.

ஆர்.எஸ்.எஸ் வழிகாட்டலில் செயல்படும் இந்து தேசியவாதக் கட்சி என்று கருதப்படும் பா.ஜ.கட்சி, எதிர்கட்சி வரிசையில் இருந்தபோது பாகிஸ்தானின் ஒவ்வொரு தாக்குதலையும் வன்மையாகக் கண்டித்தது.

2008 இல் மும்பையில் நடந்த பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பின்னால் இருந்தவர்களை பாகிஸ்தான் அரசு தண்டிக்காதவரை அந்த நாட்டுடன் சுமூக உறவு கூடாது என்று மன்மோகன் சிங் அரசுக்கு விடாமல் நினைவூட்டி வந்தது.

தாக்குதலும் சமாதானப் பேச்சும் ஒரே சமயத்தில் நடைபெற முடியாது என்று பிடிவாதம் பிடித்தது. எனவே தான், பிரதமர் மோடி பாகிஸ்தான் பிரதமருக்கு அழைப்பு அனுப்பியபோது எல்லோருடைய புருவங்களும் நெரிந்தன.

### மோடி மீதான குற்றச்சாட்டு

குஜராத்தில் நரேந்திர மோடி முதல்வராக இருந்த போதுதான் 2002 இல் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்திற்கு பிறகு வகுப்புக் கலவரங்கள் மூண்டன; அதில் 1,000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு அவர்தான் காரணம் என்று இந்திய அரசியல் கட்சிகள் சாட்டிய குற்றச் சாட்டு சர்வதேச அளவில் பல நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மனித உரிமை ஆர்வலர்களின் நெருக்குதல் காரணமாக நரேந்திர மோடிக்கு விசா தர முடியாது என்று கூட அமெரிக்கா அறிவித்தது. பாகிஸ்தான், வங்கதேசம் அகிய பக்கத்து நாடுகளில் மோடியை இந்துமத வெறியர் என்றே கண்டித்தனர்.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அந்த நாடு மூன்று முறை இந்தியாவுடன் போருக்கு வந்ததாலும், மும்பையில் நடந்த பயங்கரவாதிகளின் தாக்குதல் உட்பட பல நாச வேலைகளில் பாகிஸ்தானுக்குள்ள தொடர்பு அம்பலப்பட்டதாலும், பரஸ்பரம் அவநம்பிக்கையும் சந்தேகமும் தொடர்கிறது என்பதை மறுக்க முடியாது.

சமீபத்தில்கூட இந்திய எல்லையில் திடீர் தாக்குதல் நடத்தி, இந்திய சிப்பாய்களைக் கொன்று அவர்களில் ஒருவரின் தலையை வெட்டி எடுத்துச் சென்ற கொடூரம் கூட நினைவை விட்டு அகலவில்லை.

காஷ்மீர் விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகள் அவ்வப்போது முற்றுவதும், தணிவதுமாக இருக்கின்றன. வர்த்தக உறவுகளில் இந்தியாவுக்கு மிகவும் விரும்பப்பட்ட நாடு என்ற அந்தஸ்து வழங்க முடியாது என்று இராணுவத்தின் அறிவுரைப்படி பாகிஸ்தான் அரசு கூறிவிட்டது.

உறவு சுமூகமாக இல்லாத காரணத்தினாலேயே ஈரானிலிருந்து பாகிஸ்தான் வழியாக எரிவாயுவையும் கச்சா பெற்றோலிய எண்ணெயையும் குழாய் வழியாகக் கொண்டுவரும் திட்டத்திலிருந்தும் இந்தியா விலகியது. இந்தப் பின் னணியில் தான் மோடியின் அழைப்பும் அதை நவாஸ் ஏற்றதும் நடந்து முடிந்திருக்கிறது.

### மக்கள் விருப்பம்


இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவு நிலவுவதை மக்கள் விரும்புகின்றனர். பாகிஸ்தானில் உள்ள குருத்துவாராக்களுக்கும் சிவன் கோயில்களுக்கும் சீக்கியர்களும் இந்துக்களும் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர்.

ஆஜ்மீர், தர்கா உள்ளிட்ட இந்தியப் பகுதிகளுக்கும் பஞ்சாபிலும் உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் வசிக்கும் தங்களுடைய உறவினர்களைப் பார்க்கவும் பாகிஸ்தானியரும் இந்தியா வருகின்றனர்.

பாகிஸ்தான் நாட்டுப் பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் உறவு வலுப்படுவதை மிகவும் விரும்புகின்றனர். பாகிஸ்தான் மாணவர்கள் இந்தியக் கல்வி நிலையங்களில் கல்வி பயில்கின்றனர். மிகவும் சிக்கலான அறுவைச் சிகிச்சை தேவைப்படும் உடனடி மருத்துவ சேவைக்கு பாகிஸ்தானியர்கள் இந்தியாவுக்குத்தான் வருகின்றனர்.

குஜராத்தில் உள்ள சர்கிரீக் நீர்ணைப் பகுதி, கடற்பரப்பில் மீன்பிடி உரிமை, இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் ஆறுகளின் குறுக்கே அணைகளைக்கட்டி நீரைத் தேக்குவது, ஆடு-மாடு மேய்க்கும் போது எல்லைதாண்டி வந்துவிடும் மக்களைக் கைது செய்யாமல் அவரவர் நாடுகளுக்குத் திருப்பி அனுப்புவது போன்றவற் றில் பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன. சிலவற்றில் சுமூகமான ஒப்பந்தம் ஏற்படும் சாத்தியக் கூறுகளும் காணப்படுகின்றன.

இரு நாடுகளும் போர் நிறுத்த ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருந்தாலும் பாகிஸ்தான் இராணுவம் அவ்வப்போது இந்திய நிலைகள் நோக்கித் தாக்குதல் நடத்துகிறது. குஜராத் மீனவர்கள் மீன்பிடிக்கும் போது நீரோட்டம் காரணமாகவோ, காற்று காரணமாகவோ எல்லை தாண்டி விட்டால், கைது செய்து கராச்சி சிறையில் அடைத்து விடுகிறது.



### வாகாவில் வளரும் உறவு

இத்தனை பிரச்சினைகளுக்கும் இடையில் இருதரப்பு வர்த்தக உறவின் பலன்கள் தங்களுக்குச் சாதகமாக இருப்பதால், பாகிஸ்தானிய வர்த்தகர்கள் வாகா எல்லையருகில் இந்தியச் சரக்குகளுக்காகக் காத்திருந்து வாங்கிச் செல்கின்றனர். தங்களிடம் உபரியாக உள்ளவற்றை நல்ல விலைக்கு விற்று இலாபம் சம்பாதிக்கின்றனர்.

எனவே, மக்களும் வர்த்தகர்களும் இரு நாடுகளுக்கிடையே உறவு வலுப்பட வேண்டும் என்று நினைக்கின்றனர். சம்ஜெளதா எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை மேலும் பல ஊர்களுக்கும் கூட விரிவுபடுத்தக் கோரிக்கை வைக்கின்றனர்.

பாகிஸ்தானின் அரசியல் ஆர்வலர்களும் விவசாயம், தொழில்துறை- குறிப்பாக தகவல் தொழில்நுட்பம்- போன்றவற்றில் இந்தியா அடைந்துள்ள வளர்ச்சியைத் தாங்களும் அடைய வேண்டும் என்று விரும்புகின்றனர். அதற்கு இந்தியாவில் உள்ளதைப் போல தங்கள் நாட்டிலும் ஜனநாயகம் வலுப்படுவதை விரும்புகின்றனர்.

நரேந்திர மோடி பிரதமர் ஆனால், பாகிஸ்தான் மீது படையெடுப்பார், இரு நாடுகளும் அணு ஆயுதம் தயாரித்து வைத்திருப்பதால் போர் மூண்டால் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஏன்றெல்லாம் அச்சமூட்டப்பட்டது.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவரான நவாஸ் ஷெரீஃப், நரேந்திர மோடியின் அழைப்பு வந்ததும் தன்னுடைய கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை செய்தார்.

உள்நாட்டு அரசியல் நிலவரம், மக்களின் மன நிலை ஆகியவற்றின் பின்னணியில் மோடியின் அழைப்பை ஏற்பது என்ற முடிபை துணிந்து எடுத்தார். கடந்த ஆண்டு தான் அவரும் மக்களுடைய அமோக ஆதரவில் பிரதமரானார்.

ஆனால், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பாகிஸ்தானில் இராணுவம்தான் அதிகாரம் மிக்க அமைப்பாகச் செயற்படுகிறது. அதன் நிழலில் ஐ.எஸ்.ஐ. போன்ற உளவு அமைப்புகள் செயற்படுகின்றன. இந்தியாவுக்கு நவாஸ் ஷெரீஃப் செல்வதை அவை விரும்பவில்லை. ஆப்கானி ஸ்தானிலிருந்து தங்கள் மீது நடக்கும் தாக்குதல்களுக்கு இந்தியாதான் காரணம் என்று அவ்விரண்டும் கூறுகின்றன. பாகிஸ்தான் மண்ணில் தீவிரவாதக் குழுக்கள் பல இருக்கின்றன. அவையும் இந்தியாவுடன் பாகிஸ்தான் சுமூக உறவு கொள்வதை விரும்பவில்லை.

### மோடியின் அறிவுறுத்தல்

மும்பையில் நடந்த தாக்குதலில் தொடர்புள்ள பயங்கரவாதிகள் மீதான வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தி அவர்களைத் தண்டிக்க வேண்டும், இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் மட்டுமல்ல, பாகிஸ்தானுக்கே நாளை மிகப் பெரிய அச்சுறுத்தலாக வடிவெடுக்கக் கூடிய பல்வேறு தீவிரவாதக் குழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டும், பாகிஸ்தானின் தொழில், வர்த்தகத்துக்குப் பயன்படக் கூடிய வகையில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த வேண்டும். ஏற்கனவே பேச்சில் உடன்பாடு காணப்பட்டவற்றில் இறுதி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று நவாஸ் ஷெரீஃபிடம் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

பாகிஸ்தானின் நிலையை எடுத்துரைத்த நவாஸ் ஷெரீஃப், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பேச்சுமூலமே தீர்வுகாண .வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டார்.

கருத்து வேறுபாடுகள் தொடர்பாக எதிர்காலத்தில் தொடர்ந்து பேசவும் இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். அறிமுகச் சந்திப்பிலேயே இவ்வளவு பேசியிருப்பது பாராட்டுக்குரியது. நவாஸ் ஷெரீஃபின் மகள் கூறியதைப் போல, ஐரோப்பியக் கூட்டமைப்பைப் போல இந்தியாவும் பாகிஸ்தானும் ஏன் நட்புறவு கொள்ளக் கூடாது? அதற்கு இது நல்ல தொடக்கமாக அமையட்டும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்குழுவை ஐ.நா.பணியகம் இதுவரையும் நியமிக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடந்த போரின் போது இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்கான குழுவை ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் பணியகம் இன்னமும் நியமிக்கவில்லை.

ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் பணியகம் இந்த விசாரணைக்குழுவின் உறுப்பினர்கள் தொடர்பாக ஆய்வு செய்து வருவதாகவும், கடந்த வாரம் பலரது பெயர்கள் ஆராயப்பட்டதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், இலங்கை அரசாங்கத்துக்கு, இன்னமும் இந்த விசாரணைக் குழுவின் நியமனம் குறித்து அறிவிக்கப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 26 ஆவது கூட்டத்தொடர் அடுத்தவாரம் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், இந்த விசாரணைக்குழு பற்றிய அறிவிப்பு இந்த வாரம் அல்லது அடுத்த வாரத் தொடக்கத்தில் வெளியிடப்படும் என்று இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் 10 ஆம் நாள் உரையாற்றவுள்ள, ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை குறித்து கருத்து வெளியிடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் தமது உரையில் விசாரணைக்குழுவின் நியமனம் குறித்த அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டதுடன், இலங்கை அரசாங்கம் அதனை முறியடிப்பதற்கான நடவடிக்கையில் இறங்கவுள்ளது. போர்க்குற்ற விசாரணைக் குழு தொடர்பில் இந்திய புதிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

இலங்கையின் இறுதிப்போரின் போது இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யும் சர்வதேச குழு இந்த வாரத்தில் அறிவிக்கப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்படும் நிலையில் அந்தக்குழுவில் இடம்பெறுவோரின் பெயர்விபரம் இன்னும் தயாரிக்கப்படவில்லை என்று சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தக்குழுவில் இணைத்துக் கொள்ளப்படுவோரின் பெயர்கள் தொடர்ந்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்தக்குழுவின் இறுதி வடிவத்தை ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்.

அத்துடன் இலங்கை அரசாங்கத்துக்கும் இது அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் போர்க்குற்ற சர்வதேச விசாரணைக்குழு தொடர்பில் இந்திய புதிய அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து இன்னும் தெளிவாகவில்லை என்று இலங்கை அரசாங்க தரப்புக்கள் தெரிவித்துள்ளன. (2)


## விடைகளை அனுப்புங்கள்

வலம்புரி பத்திரிகையில் கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரசுரமாகிய பூநகரியின் புகழ் மாலைத் தொகுப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குரிய விடைகளை நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்குநடராஜாதிருஞானபவம்பூநகரியின் புகழ்மாலை பாடலாசிரியர் Tamilair @ hotmail. com என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

# வடமாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவதில் சிக்கலில்லை

## அமைச்சர் டியூ. தெரிவிப்பு



வடக்கு மாகாணசபைக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதில் எந்த சிக்கல்களும் இல்லை என்று சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

மலையகத்தின் ஹற்றன் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்துரைத்த அமைச்சர், 13 ஆவது அரசியல் அமைப்பில் இனப்பிரச்சினை தீர்வுக்கான விடயங்கள் உள்ளன. எனினும் அவை எழுத்து வடிவில் மாத்திரமே உள்ளன.

அதனை நடைமுறைப்படுத்தும் போதே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, வடக்கின் காணிப் பிரச்சினைகளை தீர்க்க சுயாதீன ஆணைக் குழு ஒன்றின் அவசியம் குறித்து அமைச்சர் வலியுறுத்தினார். அத்துடன் வடக்கின் முதலமைச்சராக விக்னேஸ்வரன் இருக்கின்ற போது அவருக்கு கீழ் பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதில் சிக்கல் ஏற்படப் போவதில்லை. எனினும் ஏனைய மாகாண சபைகளுக்கு அந்த பொலிஸ் அதிகாரத்தை வழங்கு வதிலேயே பிரச்சினை உள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார். (2)

## ஜனாதிபதி தேர்தல் குறித்து

## எதிர்க்கட்சியும் கூட்டமைப்பும் பேசிக் கொண்டனவாம்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் கடந்த 28 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தியாவில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதனால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய அழுத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு மணித்தியாலத்திற்கு அதிகமாக இந்த சந்திப்பு நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். (2)

## பொலிவியா செல்கிறார் ஜனாதிபதி மஹிந்த

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தென் அமெரிக்க நாடான பொலிவியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

குறித்த பயணம் இம்மாதம் நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

குழு 77 நாடுகளின் 50 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார்.

உலகின் மூன்றில் இரண்டு நாடுகள் அங்கம் வகிக்கும் குழு 77 நாடுகளில் 133 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இதன்போது உணவு, பாதுகாப்பு, பட்டினி உட்பட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளனர். (2)

# இன்று ஒரு தகவல்

## நன்னயம்...!

நம்மிடம் ஒருவன் பிழையாக நடந்து கொண்டால், உடனே நாம் என்ன செய்வோம்? கையை ஓங்கிக் கொண்டு, அவனை அடிக்கப் போவோம். நாமும் அவனிடம் ஒருபடி மேலாகப் பிழையாக நடந்து கொள்வோம்.

ஆனால், பண்பாடு தெரிந்தவர்கள் அப்படி நடந்து கொள்வதில்லை.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்வார்கள்.

பாயஸீத் பிஸ்தாமிங் என்பவர் ஒரு பெரிய ஞானி. அவர் ஒருநாள் இரவு நீண்ட நேரம் பள்ளிவாசலிலே இருந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியிலே ஒரு குடிகாரன். அவன் கையிலே ஒரு இசைக் கருவி. அதை அவன் கன்னா பின்னாவென்று மீட்டுக் கொண்டு வாய்க்கு வந்த மாதிரி எதையோ பாடிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தான்.

பாட்டுப்பாடியதோடு நிறுத்தவில்லை. தெருவில் சென்று கொண்டிருந்தவர்களையும் திட்டித் தீர்த்துக் கொண்டிதான்.

பாயஸீத் அவனைப் பார்த்து பரிதாபப்பட்டு; ''ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய்'' என்று கேட்டு விட்டு புத்திமதி கூற ஆரம் பித்தார்.

அவனுக்கு கோபம் வந்து விட்டது. கையிலே வைத்திருந்த அந்த இசைக்கருவியால் பாயஸீத்தின் தலையில் ஓங்கி அடித் தான்.

இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்தது. அத்தோடு அவனது இசைக்கருவியும் இரண்டாக உடைந்து விட்டது.

இவ்வளவு நடந்தும்கூட அந்தப் பெரியவர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அமைதியாகத் தலையைப் பொத்தியபடி போய் விட்டார்.

மறுநாள் காலையில் அந்தப் பெரியவர் ஒரு பையினுள் இனிப்புப் பண்டங்கள், ஒரு தொகை பணம் ஆகிய இரண்டையும் ஒரு நபர் மூலம் குடிகாரனுக்கு அனுப்பி வைத்தார்.

குடிகாரனுக்கோ ஒன்றுமே புரியவில்லை. என்ன விபரம் என்று விசாரித்தான். வந்த நபர் கடதாசியை நீட்டினார். அதிலே விபரம் எழுதியிருந்தது.

"உங்களுடைய இசைக் கருவி உடைவதற்கு என்னுடைய தலைதான் காரணம். அதற்காக நான் மிகவும் மனவேதனை அடைகிறேன். பணம் அனுப்பியுள்ளேன். புதிய இசைக்கருவி ஒன்றை வாங்கிக் கொள்ளுங்கள்.

அதன்பின் இன்னொரு விடயம். நேற்றிரவு என்னிடம் அதிகளவான கசப்பான வார்த்தைகளை நீங்கள் பேசியதாக நினைக்கிறேன். இத்துடன் அனுப்பியுள்ள இனிப்புப் பண்டங்கள் உங்கள் நாவில் உள்ள கசப்பை மாற்றியமைக்கும்'' என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தது.

இப்போது அவன் குடி மயக்கத்திலே இல்லை. தெளிவடைந்து இருந்தான். இதைப் படித்தவுடனேயே அவன் வெட்கிப் போய் தலையைக் குனிந்தான். சற்று நேரம் யோசனை செய்தான்.

உடனே தனது நண்பர்களை அழைத்து அந்த ஞானி இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டான்.

''பெரியவரே! தெரியாமல் நான் இந்தப் பாவத்தைச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய பொறுமையும் போதனையும் என்னுடைய கண்களைத் திறந்து விட்டன. இனிமேல் நானும் திருந்தி வாழ்வதற்கு உங்களது போதனை வழி சமைத்துள்ளது'' என்று கூறினான்.

ஞானி செய்த ''நன்னயம்'' குடிகாரனை எப்படித் திருத்தியிருக்கிறது பார்த்தீர்களா?...

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.நீவில் வயற்காணிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள நீவில் வயற் காணிகளில் இடம் பெறும் சட்ட விரோத மணல் அகழ்வுகளினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்

1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீவில் வயற்காணிகள் 288 பேருக்கு 4 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு அதற்கான அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இக்காணிகளில் விவசாய நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன.

தற்போது சட்ட விரோதமான முறையில் அக்காணிகளில் மணல் அகழ்வுகள் இடம் பெற்று வருவதுடன் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போர் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 25 இற்கும் மேற்பட்ட வயற்காணிகளிலேயே தற்போது மணல் அகழ்வு இடம் பெறுகின்றது.

வயற்காணிகளிலுள்ள மேல் மண்ணை வெட்டி அகற்றி விட்டு அதன் கீழுள்ள மணலையே அகழ்ந்து வருகின்றனர்.

இவ்விதம் வயற்காணிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளமையால் நெற்செய்கையை முன்னெடுக்கும் விவசாயிகள் தமது தொழில்களை இழந்து வருவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

மணல் அகழ்வு இடம் பெற்ற வயற்காணிகள் தோண்டப்பட்டு குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றன.

இதுமாத்திரமன்றிமீளெழுச்சித்திட்டத்தினூடாக 1 1/2 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட உருத்திர புரம் குளக்கட்டின் வான் பகுதியிலுள்ள அணைக்கட்டு மண் அகழப்பட்டு அதன் கீழுள்ள மணலும் சட்ட விரோதமான முறையில் அள்ளப்படுகின்றது.

இவ்வாறாக சட்ட விரோதமான முறையில் அகழப்படுகின்ற மணல் உழவியந்திரங்களில் ஏற்றப்பட்டு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றது.

தமது வயற்காணிகள் விஷமிகளால் சேதமாக்கப்படுவதாக விவசாயிகளால் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து இவர் தலைமையில் உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தலைவர், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் குறித்த வயற்காணிகளை பார்வையிட்டுள்ளனர்.

இக்கிராமத்திலுள்ள சிலரின் ஆதரவுடன் இடம்பெறும் இச் சட்ட விரோத மணல் அகழ்வினை தடுக்க கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் பிரதேச செயலர் கனியவளப் பிரிவினர் பொலிஸ் பிரிவினர் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். (9-254)

## ஆசிரியர் விடுதி அமைக்குக

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் அ.த.க. பாடசாலையில் ஆண் ஆசிரியர்களுக்கான விடுதியை அமைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இப்பாடசாலை மீள்குடியேற்றத்தின் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி முதல் இயங்கி வருகின்றது. இந் நிலையில் கல்வி நடவடிக் கைகளுக்காக வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மூன்று ஆண் ஆசிரியர்கள் வருகை தருகின்றனர்.

எனினும், விடுதி வசதிகளின்மையால் இவர்கள் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வாடகை செலுத்தி தனியார் வீடுகளிலேயே தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மாணவர்களின் கல்வி நட வடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்ள ஏதுவாக இவ் ஆசிரியர்களுக்கு விடுதி அமைத்துக் கொடுக்க வேண்டும். (9-267)




# துணுக்காய் பி.செயலர் பிரிவில் யுத்தத்தால் 48 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தினால் தாய், தந்தையை இழந்த சிறுவர்கள் 48 பேர் உள்ளதாக பிரதேச செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இதன்படி யுத்தத்தினால் பெற்றோர் இருவரையும் இழந்த 27 ஆண் சிறுவர்களும் 21 பெண் சிறுவர்களும் உள்ளனர். அத்தோடு தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவரை இழந்த சிறுவர் களாக 323 பேர் வசிக்கின்றனர்.

இவர்களுக்கான உதவிகள் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய மேற்குறித்த சிறுவர்களுடன் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களாக இனங்காணப் பட்ட 200 பேருக்கு பாடசாலை உப கரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு மிகவும் பாதிக்கப்பட்ட 30 மாணவர்கள் மல்லாவி மத்திய கல்லூரி மாணவர் விடுதியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட 60 சிறுவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் 5 சிறுவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா, 8 சிறுவர்களுக்கு தலா 500 ரூபா, 25 சிறுவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா 8 சிறுவர்களுக்கு தலா 750 ரூபா போன்ற பண உதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-15)

# வீதிகளை புனரமைக்குக

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பின் தங்கிய கிராமங்களிலுள்ள பிரதான வீதிகள் சேதமடைந்துள்ளமையால் போக்குவரத்து செய்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன்படி கிளிநொச்சி நகரிலி ருந்து ஜெயபுரம் செல்லும் கனக புரம் தொடக்கம் ஜெயபுரம் வரையான பிரதான வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது. இவ்வீதியை கோணாவில், யூனி யன்குளம், ஸ்கந்தபுரம், வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான், பல்லவ ராயன் கட்டு, ஜெயபுரம் ஆகிய கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு இக் கிராமங்களின் உள் வீதிகளும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப் படுகின்றது. சில கிரவல் வீதிகளுக்கு தார் போடப்பட்டுள்ள போதிலும் அதனால் பயணிக்க முடியாமலுள்ளது.

ஆகவே குறித்த வீதிகளை செப் பனிடுமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-254)



கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் அண்மையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பாண்ட் வாத்தியக் கருவிகள் வழங்கப்படுவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# பிரஜாவுரிமையை நிலைநாட்ட வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

பிரஜாவுரிமையை நிலைநாட்ட வாக்காளராக பதிவுகளை மேற் கொளளுமாறு வடமாகாண போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பதிவுகள் இடம்பெற்று வரும் நிலையில் மக்கள் வாக்காளராக பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில்,

யுத்த காலத்தில் எந்தக் கிராமங்களிலும் சரியான முறையில் பதிவுகள் மேற்கொள்ளப்படாமையினால் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களில் பெரும்பாலானவர்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லை.

யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது அரசியல் வாதிகளாலும், அரசியல் வாதிகளால் ஆளப்பட்ட அரச அதிகாரிகளாலும் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டது.

எவ்வாறு இருந்தாலும் தமது பிரஜாவுரிமைகளை நிலைநாட்டவும் வாக்களிக்கும் உரிமையை நிலை நாட்டவும் மக்களில் பலர் வாக்காளர் பதிவுகளை மேற்கொண்டு தம்மை வாக்களிப்புக்கு உட்படுத்தினர்.

எனவே, இந்த வேளையில் அந்த மக்களுக்கு பாராட்டுக்களை தெரிவிப்பதில் எந்தப் பின்னடிப்பும் இல்லை.

யுத்தத்துக்குப் பின்னரான ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உளளூராட்சி தேர்தல், இறுதியில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் இவ் அனை[illegible] தேர்தல்களிலும் தமிழ் மக்க[illegible] களே அதிகம் இரத்துச் செய்யப்பட்டன.

இனிமேல் அவ்வாறான தவறுகள் இடம்பெறக் கூடாது என்றால் தமிழ் மக்கள் அனைவரும் முதலில் வாக்காளர்களாக மாறவேண்டும். எனவே ஜூன் மாதம் முதலாம் திகதி பிரகடனப்படுத்தப்படும் வாக்காளர் தினத்தில் தொடங்கி ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் எமது மக்கள் அனைவரும் தமது வாக்காளர் இடாப்புக்களை பரிசீலனை செய்து பதிவுகளை மேற்கொள்ள்வேண்டுமென கேட்டு நிற்கின்றோம்.

கடந்த காலங்களில் எமது மக்களின் அசட்டையான போக்கால் எமது வாக்கு வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் தொடர்புபட்டு எமது தொகுதிகளுக்கான நாடா[illegible] குறைக்கப் பட்டுள்ள[illegible] அறிந்ததே எனத் தெரிவிக்கப்பட்டது. (9-250)

## வவுனியா பொது வைத்தியசாலையில் பொதுமக்கள் நட்புறவு சங்கம் அங்குரார்ப்பணம்



வவுனியா பொது வைத்தியசாலையில் பொது மக்கள் நட்புறவு சங்கம் நேற்று முன்தினம் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப் பட்டதுடன் அதற்கான நிர் வாக சபையும் தெரிவு செய் யப்பட்டுள்ளது.

புதிய நிர்வாக சபை தலைவராக வைத்தியகலாநிதி கு. அகிலேந்தி ரனும் உப தலைவராக வைத்திய கலாநிதி வி. சுதர்சினியும், செயலாளராக ரி.கே. இராசலிங்கமும் உப செயலாளராக வைத்தியகலாநிதி வி. சுரேந்திரனும் பொருளாளராக ச. இராசலிங்கமும் தெரிவு செய்யப்பட டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக ச. ஆன்ந்தராஜ், கு. சிவகுமாரன், ஏ.சி.எம். ரயிஸ். பி.ஜெகநிதி, கே. ஆதி, ந. கபிலநாத், எஸ். சந்திரகுமார், டி.ஜி. சரத்குமார, சங்கர் சத்தியவேல், எஸ். பாலநாதன், வைத்தியகலாநிதி ஜி. சேந்தன், என். செல்வரட்ணம், எஸ். அன்னலிங்கம், கோ.ஸ்ரீஸ்கந்தராஜா, கா. லியாகத்தலி, வே. சுரேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ் அங்குரார்ப்பண கூட்டத்தில் வைத்தியசாலையின் அபிவிருத்திகள். வைத்தியசாலையில் நோயா ளர்களுக்கான தேவைகளை நிறைவு செய்வதற்கான செயன் முறைகளை கையாளல், உட்கட்டுமான தேவைகளை மேம்படுத்தும் வழிமுறைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது. (9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு பிரதேசங்களில் புகைப்போரின் தொகை அதிகரிப்பு

இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளில் புகைபிடிப்போரின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதாக ஆய்வொன்று கூறுகின்றது.

ஆனால். வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் முன்னைய காலங்களைவிட புகைப்போரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் ஆய்வை நடத்திய அடிக் என்ற மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான தொண்டுநிறுவனம் கூறுகின்றது.

நாடளாவிய ரீதியில் 15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபையின் புள்ளிவிபரங்களின்படி, கடந்த 10 ஆண்டுகளில் சிகரெட் விற்பனையும் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் அந் நிறுவனத்தின் அதிகாரி ஏ.சி. ரஹீம் தெரிவித்தார்.

பொதுவாக இலங்கையில் சிகரெட் பாவனையாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும், வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் சிகரெட் கம்பனிகளின் வியாபார உத்திகள் காரணமாக சிகரெட் பாவனை வீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அங்கே ஒரு சந்தை உருவாகியிருப்பதனால் தான் அங்கு இப்போது சிகரெட் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது என்றார் ரஹீம்.

வடகிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் சிகரெட் பாவனை வீழ்ச்சியடைவதற்கு சிகரெட் கம்பனிகளின் உத்திகள் பற்றியும் சிகரெட் பாவனையினால் ஏற்படுகின்ற சுகாதார மற்றும் பொருளாதார பாதிப்புகள் பற்றியும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியே காரணம் என்றும் அவர் கூறினார்.

புதிய தகவல்களின்படி, இலங்கையில் புகைத்தல் காரணமாக சராசரியாக ஒரு நாளைக்கு 72 பேர் உயிரிழப்பதாகக் கூறிய ஏ.சி. ரஹீம் நாள் ஒன்றுக்கு சுமார் 24 கோடி ரூபாவை சிகரெட்டுக்காக மக்கள் செலவிடுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

இலங்கையில் அதிகரிக்கும் பொருள்விலைகளுக்கு ஏற்ப சிகரெட்டுக்களின் விலைகள் அதிகரிப்பதில்லை என்றும் இதனால் அரசாங்கத்திற்கு பெருமளவு வரி வருமானம் இழக்கப்படுவதாகவும் அந்நிறுவனம் கூறுகின்றது.




உலகில் புகைத்தல் காரணமாக ஒவ்வொரு 6 செக்கன்களுக்கும் ஒருவர் உயிரிழப்பதாகக் கூறியுள்ள உலக சுகாதார ஸ்தா பனம் புகைபொருட்கள் மீதான வரியை பெருமளவில் அதிகரிக்க வேண்டும் என்று நாடுகளைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## தமிழக மீனவர்கள் 25 பேர் கைது

தமிழக மீனவர்கள் 25 இற்கும் மேற்பட்டோர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களின் 6 விசைப்படகுகளையும் இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ளது.

தலைமன்னார் கடற்படை முகாமில் தமிழக மீனவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மீன்பிடி தடை காலம் முடிந்து கடலுக்கு சென்ற நிலையில் மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா வருவதற்கு முன் இலங்கை சிறையில் இருக்கும் தமிழக மீனவர்கள்அனைவரும்விடுவிக்கபடுவார்கள் என தெரிவித்திருந்தார்.

இதன்படி மீனவர்கள் இந்த வாரம் தமிழகம் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டு வரும் நிலையில், இலங்கை கடற்படை மீண்டும் கைது செய்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (2)

# பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனையவற்றை வழங்க முடியும்

## அரசாங்கம் நரேந்திரமோடிக்கு தெரிவிப்பு

பொலிஸ் அதிகாரமின்றி ஏனையவற்றை வழங்க முடியும் என இலங்கை அர சாங்கம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி யிடம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனையவற்றை வழங்க குவ தன் மூலம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுதத முடியும் என அரசாங்கம் அறிவித் துள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட் டால் பொலிஸ் திணைக்களமே சீர்குலைந்து விடும் .ஒன்பது மாகாணங்களுக்கும் தனித்தனியான பொலிஸ் அலகுகளை உருவாக்கு வதன் மூலம் இன வாத முரண்பாடுகள் ஏற்படக் கூடும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஏனைய விடயங்களை வடமாகாணசபைக்கு வழங்க முடியும்.

வடக்கில் தற்போதே உயிரிழந்த புலிக ளுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

இவ்வாறான ஓர் நிலையில் பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் பாரிய பிரச்சி னைகள் ஏற்படக் கூடும் என அரசாங்கம் இந்தியாவிடம் அறிவித்துள்ளதாக பத்திரி கையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (2)

# அரசு பதில் வழங்காவிடின் அரசிலிருந்து விலகுவோம்

## வீரவன்ச மீண்டும் எச்சரிக்கை

தாம் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கு உரிய பதில வழங்கப்படாவிட்டால், அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கு தயங்கப் போவதில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச மீண்டும் எச்சரித்துள்ளார்.

தமது தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட யோசனையை விமல் வீரவன்ச அண்மையில் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி தாம் யோசனையை அமைச்சர்களிடம் சமர்ப்பித்து பதில் கூறுவதாக தெரிவித்தார்.

இந்தநிலையில் யோசனையில் அடங்கியுள்ள அனைத்து விடயங்களையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. எனினும் குறிப்பிட்ட பல விடயங்களில் அரசாங்கம் தமது கவனத்தை செலுத்த வேண்டும்.

அதேவேளை, புதிய இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் போலியான உறவை ஏற்படுத்திக் கொள்ள முனைகிறது.

இந்நிலையில் காங்கிரஸின் அரசியலை காட்டிலும் பாரதீய ஜனதா கட்சி, மாறுபட்ட அரசியலை நடத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# இலங்கை இந்தியா இடையே அரசியல் முரண்பாடு ஆரம்பம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அரசியல் முரண்பாடுகள் ஆரம்பித்துள்ளதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்திய பிரதமரின் பதவிப் பிரமாண நிகழ்வின் போது இந்த முரண்பாடுகள் ஆரம்பித்ததாக செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இந்திய பிரதமருடனான முதல் சந்திப்பின்போது ஜனாதிபதியுடன் இலங்கையில் இருந்துசென்ற அமைச்சர்களும் பங்கேற்றனர்.

இதன்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்வது. நல்லிணக்கம் மற்றும் சம்பூர் அனல் மின்சார நிலையத் திட்டம் போன்ற விடயங்கள் குறித்து மோடி தமது வலியுறுத்தல். களை விடுத்திருந்தார்.

இந்தநிலையில் ஜனாதிபதி இலங்கை திரும்பியவுடன் மேற்கொண்ட நடவடிக்கைகள் மோடியுடனான பேச்சுவார்த்தையின் தாக் கத்தை வெளிப்படுத்துவதாக ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் தற்போது 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரம் அற்ற நிலை யில் அமுல்செய்யக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் சம்பூர் அனல் மின்சார நிலையத்தின் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவையாவும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான முரண்பாடுகளை சுட்டி நிற்பதாக செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. (2)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சிற்றி மெடிக்கல்ஸ் நிறுவனத்தின் புதிய கிளை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் முற்பகல் 11மணிவரையான சுப வேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்புதிய கிளை திறப்பு விழா இல 558ஏ ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறும்

இதில் வாடிக்கையாளர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்படுகிறது. (2)

# இந்தியாவில் ஈழத்தமிழ் அகதிகளுக்கு வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

தமிழகத்தில் வாழும் இலங்கை தமிழ் அகதிகளுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 191 வீடுகள் நிர்மாணிக்கப்பட வுள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் வசித்து வரும் அகதிகளுக்காக இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வணியார் அகதி முகாமில் வசிக்கும் அகதிகளுக்கு 41 வீடுகளும், தும்பாலாலி முகாமில் வசிக்கும் அகதிகளுக்கு 150 வீடுகளும் இவ்வாறு நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. (2)

# 67 மாணவர்கள் வைத்தியசாலையில்

மெதிரிகிரிய, திஸ்ஸபுர விகாரையில ஞாயிறு பாடசாலை மாணவர்கள் மீது குளவிகள் கொட்டியதில் 63 மாணவர்கள் உட்பட 67 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் இன்று முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விகாரையிலிருந்த குளவிக்கூடொன்று காற்றினால் கலைந்ததில் அதிலிருந்த குளவிகள் இந்த மாணவர்களைக் கொட்டியுள் ளன.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மெதிரிகிரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி இராசலிங்கம் சிவபாக்கியம்

அச்சுவேலி தம்பாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆரியகுளம் 3 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் சிவபாக்கியம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### துரையப்பா கணநாதமுத்துலிங்கஐயா

யாழ்.அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா கணநாத முத்துலிங்க ஐயா கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி கிழக்கு மினங்குப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனி மாநிலமாக தெலுங்கானா இன்று தொடக்கம் செயற்படும்


கடும் எதிர்ப்பு மற்றும் போராட்டத்துக்கு இடையே பிரிந்துள்ள தெலுங்கானா மாநிலம் ஜூன் மாதம் 2 ஆம் திகதி முதல் அதிகாரபூர்வமாக தனி மாநிலமாக செயற்பட தொடங்கும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது.

அதன்படி தெலுங்கானா மாநிலம் இன்று உதயமாகிறது.தெலுங்கானா" என்றால் "தெலுங்கர்களின் நாடு" என்று அர்த்தமாகும். தேசிய கீதமாக "ஜன கன மன" பாடல் இருப்பது போல தெலுங்கானா மாநிலத்துக்கு என்று, "ஜெய ஜெய ஹே தெலுங்கானா" என தொடங்கும் பாடல் எழுதப்பட்டு, இசை வடிவிலும், பாடலுமாக தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த பாடல் கொண்ட இலட்சக் கணக்கான சி.டிக்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.தெலுங்கானா போராட்டத்தில் உயிர் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 8.15 மணிக்கு தெலுங்கானா ஆளுநர் மாளிகையில் நடக்கும் விழாவில் சந்திரசேகரராவ், தெலுங்கானாவின் முதல் முதல்-அமைச்சராக பதவி ஏற்கிறார். அவருக்கு ஆளுநர் நரசிம்மன் பதவி பிரமாணம் செய்து வைக்கவுள்ளார்.சந்திரசேகரராவுடன் 12 பேர் மந்திரிகளாக பதவி ஏற்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. புதிய முதல் அரசின் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ளும்படி பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புதிய அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக தெலுங்கானா உருவாக பாடுபட்ட தலைவர்களை கொண்டு ஒரு குழு அமைக்கவும் முடிவு செய்துள்ளார்.

சீமாந்திராவில் எதிர்வரும் 8 ஆம் திகதி தெலுங்கு தேசம் தலைவர் சந்திரபாபு நாயுடு புதிய முதலமைச்சராக பதவி ஏற்கவுள்ளார்.

அதுவரை அங்கு ஆளுநரின் ஆட்சி நடைபெறும். இரு மாநிலங்களுக்கும் பொதுவான



வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா அண்மையில் ஜப்பானுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். இதன்போது வங்க பிரதமரை ஜப்பான் பிரதமர் சின்சோ அபே டோக்கியோ அரச மாளிகையில் வைத்து வரவேற்றதைப் படத்தில் காணலாம்.

# அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் எந்த செயலையும் அனுமதிக்க முடியாது

## சீனாவுக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை



மற்றைய ஆசிய நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக சீனா நடக்கக் கூடாது. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அமைதியை சீர்குலைக்க முயற்சிக்கும் அத்து மீறல் நடவடிக்கைகளை சீனா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சீனாவுக்கு முதன் முறையாக அமெரிக்கா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிங்கப்பூரில் 13ஆவது ஆசிய நாடுகளின் பாதுகாப்பு மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஜப்பான சீனா உட்பட தெற்காசிய நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அமெரிக்காவின் இராணுவ அமைச்சர் சக் ஹேகல் கலந்து கொண்டார். இவரது பேச்சு தான் பலரையும் திகைக்க வைத்துள்ளது.

பாதுகாப்பு மாநாட்டில் சீன இராணுவ துணை தளபதி லெப்டினன்ட் ஜெனரல் வாங்க் குவான் சுவாங் மற்றும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயும் பங்கேற்றனர். இவர்கள் தவிர, தைவான், ப்ரூனை, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா பிரதிநிதிகளும் பங்கேற்றனர். இக்கூட்டத்தில்அமெரிக்க இராணுவ அமைச்சர் ஹேகல் உரையாற்றுகையில்,

அமெரிக்கா, எல்லா நாடுகளின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் முழு மதிப்பு அளிக்கிறது. ஒரு நாட்டில் இன்னொரு நாடு ஆக்கிரமிப்போ, அத்துமீறலோ நடத்தக்கூடாது என்ற கொள்கையை கடைபிடித்து வருகிறது. இந்த வகையில் தெற்காசிய நாடுகளின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக யாரும் இருக்க கூடாது என்பதிலும் அமெரிக்கா அக்கறை காட்டுகிறது.

தெற்காசியா உட்பட ஆசிய நாடுகளிடையே அமைதி நீடிக்க வேண்டும் நட்புறவு தழைக்க வேண்டும் என்பதிலும் அமெரிக்கா முழு ஒத்துழைப்பு தர உள்ளது. இது சர்வதேச நடைமுறையும் கூட. இந்த நடைமுறைக்கு பங்கம் விளைவிக்கும் எந்த செயலையும், எந்த ஒரு நாடும் செய்ய அமெரிக்கா ஒரு போதும் அனுமதிக்காது.

சமீப காலமாக தெற்கு சீன கடலில் சீனாவின் அத்துமீறல் அதிகரித்து வருகிறது. அதனால், அந்த தென்கிழக்கு ஆசிய மண்டலத்தில் உள்ள நாடுகளின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. இதை சீனா உணர வேண்டும். அமைதியை நிலைகுலைய வைக்கும் எந்த முயற்சியிலும் சீனா ஈடுபடக் கூடாது. இவ்வாறு ஹேகல் காரசாரமாக பேசினார்.

இப்பேச்சுக்கு பின், சீன இராணுவ துணை தளபதி வாங்க் குவான் சாங்குடன் ஹேகல் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது அவர் பேசியதை வாங்க் சுட்டிக்காட்டி வியப்பும், வருத்தமும் வெளியிட்டார். நீங்கள் இப்படி பேசுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

நீங்கள் இப்படி வெளிப்படையாக பேசியதை நான் வரவேற்கிறேன். ஆனால், உண்மை தெளிவில்லாமல் பேசியது வியப்பாக உள்ளது. சீனா எந்த அத்துமீறலிலும் ஈடுபட்டதில்லை ஆனால், மற்றவர்கள் அத்துமீறினால் அதற்கு கண்டிப்பாக பதிலடி தரும் என்று வாங்க் பதில் அளித்தார்.

**ஜப்பான் கொதிப்பு:**

ஜப்பான் பிரதமர் அபே உரை



யாற்றுகையில்,

தென் கிழக்கு ஆசிய அமைதிககு பங்கம் விளைவிக்கும் எந்த முயற்சியையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட தயாராகி விட்டது ஜப்பான். தெற் காசிய பாதுகாப்புக்கு முன்னின்று செயறபடவும் நாங்கள் தயார என்று கூறியது மாநாட்டில் பலரையும் திக்க வைத்தது.

சீன பிரதிநிதி வாங்க் முகம் இறுகிப்போனது. பிலிப்பைன்ஸ், வியட் நாம் கடல் பகுதிகளில் நடக்கும் அத்துமீறல்களுக்கு பதிலடி தர ஜப்பான் தன் கடலோர பாது காப்பு படையை அங்கு நிறுத்தும் என்றும் அபே சொன்னதும் வாங்க் கோபம் அதிகரித்தது.

அபே பேசியதற்கு பதில் அளித்து வாங்க் பேசியபோது,

அடிப்படையே இல்லாமல் சீனா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் எல்லாம் தவறானது ஆதாரமற்றது. ஜப்பான் தன் தவறை உணராவிட்டால், சீனாவுடனான உறவு நீடிக்காது என்று பதிலுக்கு எச்சரித்தார். (2)

### சீனாவில் நில நடுக்கம்

## 4 ஆயிரம் வீடுகள் தரைமட்டம்

சீனாவில் ஏற்பட்ட கடுமையான நில நடுக்கம் காரணமாக 4 ஆயிரம் வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

சீனாவின் யுனான்ஸ் மாகாணத்தில் அண்மையில் கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவானது.

இந்த நில நடுக்கம் காரணமாக 4 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. 43 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தப் பகுதியில் வசித்த 35 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். ஒன்றரை இலட்சம் பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இராணுவ வீரர்கள் மற்றும் ஏராளமான துணை இராணுவப் படையினர் மீட்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். (2)

## ஒபாமாவை பெட்ரோ சந்திப்பார்

(வோஷிங்டன்)

உக்ரைன் புதிய ஜனாதிபதி பெட்ரோ டைமோ ஹெஸ்கோலை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நாளை மறுதினம் புதன்கிழமை சந்திக்கப் போவதாக வோஷிங்டன் வெள்ளை மாளிகையின் துணை தேசிய ஆலோசகர் பென்ரோட்ஸ் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது கிழக்கு உக்ரைன் விவகாரம் முக்கிய இடம் பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் கிழக்கு உக்ரைனில் அமைதியை நிலைநரட்டுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்போவதாகக் கூறியுள்ளார். (2)

# தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டும்

## மோடிக்கு விஜயகாந்த் கடிதம்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் அன்றாடம் தாக்குதலுக்கு உள்ளாகும் தமிழக மீனவர்களின் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டுமென பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கு தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்திலுள்ள முக்கிய பிரச்சனைகளைத் தீர்க்கக்கோரி பிரதமருக்கு தே.மு.தி.க தலைவர் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ள பிரச்சினைகள் வருமாறு,

தமிழக மக்கள் குடிநீர் பற்றாக் குறையால் பரிதவிக்கின்றனர். கிராமம், நகரம் என்றில்லாமல் அனைத்து மக்களும் குடிநீர் வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் 70 இற்கும் அதிகமான மக்கள் விவசாயத்தை நம்பியுள்ளனர். சமீப காலமாக விவசாயத்திற்கு போதுமான நீர் ஆதாரம் இல்லாததால் விவசாய உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டு, தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

இலங்கை கடற்படையினரால் அன்றாடம் தாக்குதலுக்கு உள்ளாகும் தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

இலங்கை நமது நட்பு நாடு என்ற பெருந்தன்மையோடு இந்தியா நடந்து கொண்டாலும், இலங்கை அதை மதிப்பதில்லை.

அங்கு வாழும் தமிழர்கள் போரினால மிகவும் பாதிக்கப்பட்டு, மனதளவிலும், உடல் அளவிலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தங்கள் பகுதிகளில் மீண்டும் குடியேற்றப்பட்டு, அனைத்து மனித உரிமைகளோடு, சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்களும் நடத்தப்படுவதை தங்கள் தலைமையிலான அரசு ஏற்படுத்திட வேண்டும்.

இவ்வாறு பல தரப்பட்ட பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஊழலற்ற வளமான வலிமையான பாரதத்தை உருவாக்குவோம் என்று குறிப்பிட்டுள்ளார் (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை போல் வளர்த்து பின்லைநாள் சண்டாளர்
துள்ளித்துடிதுடிக்க துண்டாக வெட்டினரோ
- சோமசுந்தரப் புலவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விளக்கு வைக்கும் இவ் வேளையில் ஆட்டுக் கடாக்கள் எழுதும் மடல்

எமது அருமை எஜமானர்களே! உங்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட ஆட்டுக் கடாக்களாகிய நாம் உங்களுக்கு எழுதும் இறுதி மடல் இது. ஐந்தறிவு படைத்த எங்களை வளர்த்த நீங்கள் ஆறறிவு படைத்தவர்கள். எனவே நீங்கள் எடுக்கின்ற எந்த முடிவையும் மாற்றி அமைக்கும் தந்திரோபாயமும் வல்லமையும் எங்களிடம் அறவேயில்லை.

இருந்தும் எங்களை அன்போடு வளர்த்து ஆளாக்கிய நீங்களே எங்களை வேள்வியில் வெட்டிச் சரிக்கவேண்டும் என்று நினைத்தால் நாம் என்ன செய்யமுடியும்?

சவுதி அரேபியாவில் றிசானா என்ற ஏழைப் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற எடுத்த முயற்சியில் மானிடம் தோற்றுப் போன செய்தி நீங்கள் அறியாததல்ல.

இருந்தும் எங்களின் நிலையும் அதுவே எனும்போது யாருக்காக யார் அழுவது என்ற கேள்வி எழுகிறது.

அன்புக்குரிய எஜமானர்களே! நீங்கள் கவுணாவத்தையில் விளக்கேற்றும் நாள் நெருங்குகிறது. தீபம் எல்லோருக்கும் ஒளியைத்தருவதும் மகிழ்வைத் தருவதுமாகும். ஆனால் கவுணாவத்தையில் நீங்கள் விளக்கேற்றினால் அதுவே எங்களின் இறுதிக் காலம் நெருங்குவதற்கான பச்சைக்கொடியாகும்.

நீங்கள் கறுப்பு யூலை என்ற துன்ப நாளை நினைவு கொள்வதை நாம் அறிந்திருக்கின்றோம்.

உங்களுக்கு யூலை கறுப்பு மாதம் என்றால், எங்களுக்கு யூன் கறுப்பு மாதம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

ஆட்டுக் கடாக்களாகிய நாம் உங்களுக்கு எழுதும் இக் கடிதம் இறுதி மடலாக இருந்தாலும் எங்களுக்கு உயிர்ப் பிச்சை தாருங்கள் என்று உங்களை இரந்து கேட்பதாகவே இவ் மடலை எழுதுகின்றோம்.

எமது அன்புக்குரிய எஜமானர்களே! ஆட்டுக் கடாக்களாகப் பிறந்த நமக்கு என்றோ ஒரு நாள் கழுத்து வெட்டு என்பதுதான் விதி. இந்த விதியை எழுதிய பிரம்மாவுக்கு எங்கள் மீது ஏன்தான் இத்துணை கடுப்போ நாம் அறியோம்.

இருந்தும் எழுதப்பட்ட விதி தலைவெட்டு என்பதற்காக எங்கள் இனத்தை ஒரே நாளில் வெட்டிச் சரிப்பது எவ்வகையில் நியாயமாகும்? அதிலும் கருணையே வடிவமான இறைவனின் சந்நிதியில் வைத்து எங்களை வெட்டிச் சரிக்கிறீர்களே! அது உங்களுக்குச் சம்மதமான செயலா? என்று ஒரு கணம் உங்கள் மனச்சாட்சியைக் கேளுங்கள்.

நாங்கள் வாழ விரும்புகிறோம். எங்கள் இனத்தையும் பெருக்க ஆவலாக உள்ளோம். ஆனால் வேள்வி என்ற பெயரால் இளமையிலேயே எங்கள் இறுதிக் காலம் முடிந்து போகிறது.

எங்களை வளர்த்த எஜமானப் பெருமக்களே! உங்களிடம் நாம் கேட்பதெல்லாம் உங்களின் செல்லப்பிள்ளைகளாகிய எங்களை வேள்வியில் வெட்டிச் சரிக்காமல் நாங்கள் வாழ உங்கள் கருணையைக் காட்டுங்கள்.

இது இறுதி மடலா? அல்லது எங்கள் உயிரைக் காப்பாற்றிய எஜமானர்களுக்கு நன்றி என்று எழுதக்கூடிய கருணை மடலா? என்பது உங்கள் கையில்தான் இருக்கிறது.

## இலத்திரனியல் மற்றும் மின்சார உதிரிப்பாக கழிவுகள் சேகரிப்பு

(சாவகச்சேரி)


யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களினால் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை இலத்திரனியல் மற்றும் மின்சார உதிரிப்பாகக் கழிவுகள் சேகரிக்கப்படவுள்ளதாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சில் அறிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் இக் கழிவுப் பொருட்களை உள்ளூராட்சி சபை அலுவலகங்களில் அல்லது அவர்களினால் அறிவிக்கப்பட்ட இடங்களில் ஒப்படைத்துதவுமாறும், இக் கழிவுப்பொருட்களிலுள்ள நச்சுப்பொருட்கள் மழைக் காலங்களில் விவசாய நிலங்கள், நீர் நிலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுவதால் எமது இயற்கைச் சூழல் மாசடைந்து நஞ்சாகின்றது.

இதனால் நாமும் எமது சந்ததியினரும் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழல் உருவாகும்.

எனவே இலத்திரனியில் கழிவுப் பொருட்களை உரியமுறையில் அகற்றுவதற்கு பொதுமக்கள் தங்களாளிய ன்ற ஒத்துழைப்பை வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2,29)

## 13-ம் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்-சுவாமி




(சென்னை)

13-ம் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம் துரித கதியில் 13-ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நல்லதை கொடுத்தால நல்லது கிடைக்கும் என்ற எணணக் கருவின் அடிப்படையில் 13-ம் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் கடந்த கால கசப்பான அனுபவங்கள் முறியடிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டிய தென அவர் தெரிவித்துள்ளார். ஜெயலலிதாவின் தேர்தல் வெற்றியானது இலங்கைத் தமிழர் பிரச்சினையால் கிடைக்கப்பெறவில்லை எனவும், திமுகவின் 2ஜீ ஸ்பெக்ட்ரம் உள்ளிட்ட பல்வேறு ஊழல் மோசடிகள் அம்பலமானதால ஜெயலலிதா வெற்றியீட்டியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் வைகோ சொந்த தொகுதியில் தோல்வியை தழுவியதாகத் தெரிவித்துள்ளார்.

சினிமாத்துறையைச் சார்ந்தவர்கள் அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும் இதில அதிகமானவர்களுக்கு புலம்பெயர் புலி ஆதரவாளர்கள் நிதி உதவி வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் கட்சியின் பலவீன மான நிர்வாகமே இலங்கை சீனாவுடன் நெருங்குவதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் வெளியுறவுக்கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என சுவாமி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.மேலும் 13-ம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் அதன் பின்னர் காணி, பொலிஸ் அதிகாரங்களை பின்னர் வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று



நீராவிக் குளக்கரையான் திருநாள் ஒன்று - காமதேனுவாகனத் திருக்காட்சி

சுசீலாவைச் சுமந்தவளில்
செவ்வாடைதரித்து
கற்பகத்தின் வாசிகையும்
பாம்பனியும் பூண்டு
சுழுமுனையில்க்குண்டலினி
ஏற்றிட்ட எம்மானார்
சித்தியின் நாதனாய்
ஊர்கின்றான்! இன்று.

*கஜவதனகுஹராஜனார்*

## படிப்பகம் கட்டடத் திறப்புவிழா

(இணுவில்)

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத்தின் திருமதி அன்னலட்சுமி சின்னராசா ஞாபகார்த்த படிப்பக கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு தலைவர் ச.சிவசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக கே.சச்சிதானந்தன், பொறியியலாளர் சி.தயாபரன், வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் த.முத்து.ராதகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மா.இரகுபதி, லண்டன் மூதவை உறுப்பினர் க.மாணிக்க வாசகர் ஆகியோர் கலந்து கொள்ள, இந் நிகழ்வில் ஆசியுரைகளை இணுவில் ஸ்ரீ பரராஜகேசரப் பிள்ளையார் கோவில் குரு சிவஸ்ரீ வை.சோமஸ்கந்தக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ். பல்கலைக்கழக கணிதத்துறைத் தலைவர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் யா/திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் வழங்குவர்.

தொடக்க உரையை யாழ்.பல்கலைக் கழக வணிகத்துறை தலைவர் பேராசிரியர் க.தேவராஜா, நூல் வெளியீட்டு உரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைசிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் வழங்குவர்.

நூல்களை அண்ணா தொழிலக நிர்வாகி சு.பொ.நடராசா, சட்டத்தரணி சி.செந்தில்ராஜன், இணைய பொறியியலாளர் சி.தணிகைராஜன் ஆகியோர் வெளியிட்டு வைக்கவுள்ளனர்.

முதற்பிரதியை மூதவை உறுப்பினர் து.சிவராஜா பெற்றுக் கொள்வார். (அ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### ஆஸ்தீகமும் நாஸ்தீகமும்



இயற்கையமைப்பை அதன் ஆதிநிலையிலிருந்து அறிவின் எல்லை வரை அறிந்து கொள்வதே தத்துவ விளக்கம் எனப்படும். தத்துவ விளக்கம் பெற்றவன் இயற்கையே எல்லாமாகவும், தானுமாகவும் இருக்கும் உண்மையை உணர்ந்து கொள்கின்றான். அவன் வேறு, இயற்கைவேறு என்றில்லாத பேதமற்ற நிலையை உணர்ந்து கொண்டால் அவனுக்கு அப்பாலும், அவனுக்கு அன்னியமாகவும், ஏதுமில்லை என்று தெளிவடைகின்றான். இந்தத் தெளிவே நாஸ்தீகம் எனப்படும்.

இந்தநிலையை ஆறறிவு பெற்ற மனித இனத்தில் வயது வந்தோர் எல்லோரும் அறிந்தால் அல்லாது மனித இன வாழ்வின் அமைதியும், இன்பமும் நிலைப்பதற்கில்லை.

ஆகவே, பூரண விளக்கம் பெற்றவனே நாஸ்தீகன். அவன் பரப்புவதே ஆஸ்தீகம் ஆகும். நாஸ்தீகம்என்பது உண்மையை உணர்ந்த நிலை. ஆஸ்தீகம் என்பது உண்மையை உணர மனிதனை நம்பிக்கை மூலம் பக்குவப்படுத்தும் வழி.

நாஸ்தீகம் பரப்பக் கூடியதன்று. உணரக்கூடியது.

ஆஸ்தீகமே பரப்பக்கூடியது. அதன் முடிவில் காயே பழமானது போல் அதுவே நாஸ்தீகமாக மாறிவிடும்.

அறிவின் மயக்கத்தாலும், [illegible] பிழைப்புக்காகவும் பேசப்படும் ஆஸ்தீக [illegible] பலவிதமான தீமைகளை விளைவிப்பனவாகும்.

## வேட்பாளர் தொடர்பில் இணக்கம் இல்லை -ஜே.வி.பி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப் போகும் வேட்பாளர் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பொது இணக்கம் இல்லை என ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தமது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படுவார் என அந்த கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எனினும் அந்த கட்சியின் பிக்கு முன்னணி மாதுளுவாவே சோபித தேரர் பொது வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என கூறியுள்ளது. இதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பொது இணக்கம் இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியினால் துன்பங்களை அனுபவிப்பவர்கள் மற்றும் ஏனைய பல்வேறு சக்திகளில் உள்ளவர்களை ஒன்றிணைக்கக் கூடிய மாற்று சக்தியை ஜே.வி.பி கட்டியெழுப்பும்.

ஐக்கிய தேசியக் கட்சி என்ன தீர்மானத்தை எடுத்தாலும் நாட்டின் பொது நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய சக்திகள் எமது மாற்று சக்தியுடன் ஒன்றிணைந்து வெற்றியடையும் எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி

## யாழ். பாடசாலைகள் ஆதிக்கம்



கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை



சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை



பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை



மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை



நெல் லியடி மத்திய கல்லூரி



மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் 5 கட்டங்களாக நடைபெற்றன. இதில் இடம் பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப்போட்டியில் யாழ். மாவட்ட அணி முன்னிலை பெற்றுள்ளது.

15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கபடிப் போட்டியில் யாழ்ப்பாணம் வடமராட்சி கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை முதலாமிடத்தினையும் யாழ்ப்பாணம் வலிகாமம் சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டாமிடத்தையும் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது.

15 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் வ்வுனியா வடக்கு பெரியகுளம் மகாவித்தியாலயம் முதலாமிடத்தினையும் வலிகாமம் பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டாமிடத்தினையும் வடமராட்சி மெத டிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டது.

19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் யாழ்ப்பாணம் வடமராட்சி நெல்லியடி மத்திய கல்லூரி முதலாமிடத்தினையும் யாழ்ப்பாணம் வடமராட்சி மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை இரண்டாமிடத்தினையும் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டது.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக சம்மேளனங்களுக்கிடையிலான பெருவிளையாட்டு போட்டிகள் [illegible] பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் மைதானத்தில் அண்மையில் [illegible] ங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் இரண்டாமிடத்தை சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் பெற்றுக் கொண்டன.

## ஆலடி சிந்து வெற்றி


யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 9:5 என்ற வித்தியாசத்தில் பழ்ங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 7-வது ஐ.பில் எல் கொல்கத்தா சம்பியன்



**பஞ்சாப் அணிக் கெதிரான 2014-ம் ஆண்டுக்கான ஏழாவது ஐ.பி.எல் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை இரண்டாவது முறையாக தட்டிச் சென்றது.**

கடந்த 2 மாதங்களாக நடந்து வந்த 7-வது பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் பெங்களூருவில் நடந்த இறுதிப் போட்டியில் பஞ்சாப், கொல்கத்தா அணிகள மோதின. முதல் பிளே ஆப் சுற்றில் பஞ்சாப் அணி கொல்கத்தா அணியிடம் தோல்விடைந்தது குறிப்பிடத்தக்கது. இப் போட்டியில் முதல் முறையாக கிண்ணத்தை வெல்ல பஞ்சாப் அணியும், இரண்டாவது முறையாக கிண்ணத்தை தனதாக்க கொல்கத்தா அணியும் தீவிரம் காட்டின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி அணித்தலைவர் காம்பீர் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இதனையடுத்து பஞ்சாப் அணி களமிறங்கியது. துவக்க வீரராக களமிறங்கிய சேவக் 7 ஓட்டங்களல் ஆட்டமிழந்தார். பியூஸ்சாவ்லா 67 ஓட்டங்களல், கப்டன் பெய்லி ஒரு ஓட்டங்களலும ஆட்டமிழந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மக்ஸ்வெல் டக் அவுட்டானார். இறுதியில் பஞ்சாப் அணி 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 199 ஓட்டங்கள் எடுத்தது. பஞ்சாப் அணியின் சகா சிறப்பாக விளையாடி சதமடித்தார். 55 பந்துகளை சந்தித்த சகா, 115 ஓட்டங்கள் எடுத்து அவுட்டாகாமல் இருந்தார். பிரீமியர் கிரிக்கெட் தொடரின் பைனலில் முதல் சதமடித்த வீரர் என்ற பெருமையையும் சகா பெற்றார்.





இதன் பின்னர் 200 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது. துவக்க வீரராக களமிறங்கிய உத்தப்பா 6 ஓட்டங்களல் அவுட்டானார். கப்டன் காம்பீர் 23 ஓட்டங்களலும் அவுட்டானார். அதிரடியாக விளையாடிய மணிஸ் பாண்டே 94 ஓட்டங்களல் அவுட்டானார். யூசுப் பதான் 36 ஓட்டங்களல, அல் ஹசன் 12 ஓட்டங்களல, ரியான் டென் 4 ஓட்டங்களல ஆட்ட மிழந்தா. இறுதியில் கொல்கத்தா அணி 19.3 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 200 ஓட்ட ங்கள் எடுத்தது. இதன் மூலம் கொல்கத்தா அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றது. கொல்கத்தா அணி கைப்பற்றும் இரண்டாவது கிண்ணமாகும்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் மனிஸ பாண்டேவும் தொடர் நாயகனாக பஞ்சாப் அணியின் மக்ஸ்வெல்லும் தெரிவாகினா். இத் தொடரின் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரராக கொல்கத்தா அணியின் உத் தப்பாவும், அதிக விக்கெட்டுக்கள் எடுத்த வீரராக சென்னை அணியின் மோகித் சர்மாவும் காணப்படுகின்றனா். (க)



## விக்னேஸ்வரன் இன்று முல்லைத்தீவு பய்ணம்

(முல்லைத்தீவு)

சென்ற மாகாணசபை கூட்டத் தொடர்களில் முன்வைக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதன் பொருட்டு அவ்விடங்களை பார்வையிடவும், அம்மக்களுடன் குறைகேள் சந்திப்புகளை நடத்தவும் முல்லைத்தீவுக்கு வட மாகாணசபையின் முதலமைச்சர் இன்று பயணம் செய்கிறார்.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான், கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற பகுதிகளில் காணப்படும் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் முன்னமே வட மாகாண சபையில் வட மாகாணசபை உறுப்பினர் ரவிகரனால் பிரேரணைகள் சில முன்வைக்கப்பட்ட நிலையில் மேற்படி பயணம் இன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

இது தொடர்பில் மேலும் அறிய வருகையில்,

கடந்த மாகாண சபையின் கூட்டத தொடரின் 9-வது அமர்வில் ஒட்டுசுட்டான் தட்டயமலை வாவெட்டிமலை கருங்கல் அகழ்வு விடயமாக ரவிகரனால் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து அங்கு நடைபெறும் பிரச்சினைகளை நேரில் பார்வையிட வேண்டும் எனவும் அங்கு வலியுறுத்தப்பட்ட நிலையில், ஒட்டுசுட்டான், கொக்கிளாய் மற்றும் கொக்குத்தொடுவாய் பகுதிகளில் காணப்படும் மக்கள் குறைகளை பார்வையிடவும் மக்கள் பிரச்சினைகளை நேரடியாக கேட்டு அவர்களுடன்உரையாடவும்இன்றைய பயணம்ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என அறியவருகிறது.

மேற்படி இடங்களை பார்வையிட்ட பின்னர் பிற்பகல் புதுக்குடியிருப்பு பிரதேச சபை திறப்பு விழாவிலும் கலந்து கொள்ளவுள்ளார். (செ-11)

## உதைபந்தாட்ட போட்டி

(தும்பளை)

உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டி நேற்று நடைபெற்றது. போட்டியில் வதிரி டயமன் A அணியை வீழ்த்தி நாகர் கோயில் இளந்தென்றல் அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் செந்தமிழ் அணியை எதிர்த்து விண்ணைமீன் B மோதவுள்ளது. (க-19)

## கொக்குவில் இந்துவில் இன்று தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரின் தமிழ் மன்றம் நடத்தும் தமிழ் விழா இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளா திருமதி செல்வஅம்பிகை நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தொடக்க உரையாற்றுவார். இவ் விழாவில் தேமதுரம நூல் வெளியீடும் இடம்பெறும். (ந)

## ஸ்ருதி ஹாசன் தான் அழகு ரெய்னாவை கடுப்பேற்றிய ஜடஜா







ரெய்னாவின் ஆட்டத்தை விட அவரது காதலி ஸ்ருதி தான் அழகு என சென்னை அணியின் சக வீரரான ஜடேஜா கிண்டல் செய்துள்ளார்.

பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் அதிரடியால் ரசிகர்களை தன் பக்கம் இழுத்தார் ரெய்னா. கடினமான பஞ்சாப் அணியின் இலக்கை நோக்கி சென்னை அணியை பயணிக்க வைத்தார்.

6 ஓவரில் சென்னை அணி 100 ஓட்டங்களை பெற்று அசத்தக் காரணமாக இருந்தார் ரெய்னா. இவர் 25 பந்தில் 87 ஓட்டங்கள் அடித்தார். இருப்பினும் மற்ற வீரர்களின் சொதப்பல் ஆட்டத்தால் சென்னை அணி தோல்வியடைந்தது.

இதனிடையே சென்னை அணியின் சகவீரரான ரவீந்திர ஜடேஜா ரெய்னாவின் ஆட்டத்தைவிட அவரது காதலி சுருதி ஹாசன் தான் அழகு என்று டுவிட் செய்துள்ளார்.

அவர் ரெய்னாவின் ஆட்டத்தை விட அழகானது ஒன்று உண்டு என்றால் அது அவரது காதலி சுருதி ஹாசைன் தான என்று தெரிவித்திருந்தார்.

ஆனால்அவசரத்தில்சுருதிஹாசன் என்பதற்கு பதிலாக /ஹசைன் என்று பெயரை மாற்றியிருந்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள்...

ஆறு படகுகளில் வந்த இந்த மீனவர்கள் தலைமன்னாரில் உள்ள கடற்படை முகாமுக்கு நேற்று அதிகாலை கொண்டுவரப்பட்டுள்ள அதேவேளை, மேலும் ஒரு படகு கடலில் தத்தளிப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து, அந்தப் படகையும அதில் உள்ள மீனவர்களையும் மீட்டு வருவதற்கு, கடற்படையினர் அங்கு விரைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களுடைய 6 படகுகளையும் மன்னார் கடற்தொழில் மற்றும் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்து, காவல்துறையினரின் உதவியுடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீன் உற்பத்தி காலத்தை முன்னிட்டு மீன்பிடித் தொழில் நிறுத்தப்படும் காலம் முடிவடைந்து இந்திய மீனவர்கள் கடலுக்குத் திரும்பிய முதல் நாளன்றே இந்த 29 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர். தேர்தலில் பாரதிய ஜனதா அமோக வெற்றிபெற்று நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்ற போது இந்த விழாவில் கலந்து கொள்ளும்படி இலங்கை ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவரும் விழாவில் கலந்து கொண்டார்.

இந்தவிழாவில் கலந்துகொள்வதையொட்டி நல்லிணக்கத்தின் அடிப்படையில் இலங்கை சிறையில் இருந்த தமிழக மீனவர்கள் அனைவரையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலை செய்திருந்தார்.

இதனாலும்மோடிதலைமையில் இநதியாவில் புதிய அரசு அமைந்து விட்டதாலும் இலங்கை கடற்படை கைது நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இருப்பார்கள் என தமிழக மீனவர்கள் நம்பிக்கையோடு இருந்தனர்.

ஆனால் எது எப்படியிருந்தாலும் ஆட்சிமாறினாலும் காட்சி மாறவில்லை என்பதுபோல இலங்கைக் கடற்படையினர் அவரது சுயரூபத்தை மீண்டும் காட்டியிருப்பது மீனவர்கள் மத்தி யில் கலக்கத்தை ஏற்படுத்திவிட்டது. (முன்னர் கிடைத்த செய்தி உள்ளே) (செ-11)

# முன்னாள் போராளி...

பட்டுள்ளது.

வாகனேரி குளத்துமடுவவைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் யானைவழுங்கி எனும் வயல் பிரதேசத்தில்,

உள்ளூரில் தயாரிக் கப்பட்ட துப்பாக்கி மற்றும் கைக் குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் இன்னும இருப்பதாக விசாரணைகளில் தெரிவித்துள்ளதாகவும் அது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கு எதிராக வாழைச்சேனை நீதவான் நீதி மன்றத்தின் மூலம் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் தேடப்பட்ட நிலையில் தலைமறைவாக வாழ்ந்து வந்த நிலையிலேயே நேற்று பிற்பகல் வாழைச்சேனை பொலிஸ் நிலைய புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டது. (செ-11)

# இலங்கை மீதான...

தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது என்பதனை இலங்கைப் பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

அரசியல் பிரச்சினைக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகத் தீர்வு வழங்கப்படும் எனவும் நிமால் சிறி பால டி சில்வா இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய மாநிலங்களுக்கு எவ் வாறான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பது குறித்து இலங்கை, இந்திய மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்காது என தெரிவித்த அமைச்சர் 13-ம் திருத்தச் சட்ட யோசனையை இந்தியா இலங்கை மீது திணித்தது நியாயமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் (O/L), (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : M.Rajan -0772286054 (6549)


# தந்தை மக...

காக சடலங்களை மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டார்.

மர்மமான முறையில் மீட்கப்பட்ட இச்சடலங்கள் கொலையாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படு வதால் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-64,60,24)

# இந்தியப் பிரதமர்...

ஆட்சியை விட்டு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும்.

இவற்றினால் மக்கள் மத்தியில் கிளர்ச்சிகள் ஏற்பட்டு அரசாங்கத்திற்கு பாதிப்புகள் ஏற்படும் என எதிர்க் கட்சிகள் எண்ணிக் கொண்டிருக்கின்றன.

பிரதமர் மோடி இலங்கை தொடரபில் சாதகமாக செயற்படுவார் என சிலர் எண்ணுகின்றனர்.

போர் நடைபெற்ற காலத்தில் இந்தியாவில் பிஜேவி ஆட்சியில் இருந்திருந்தால், போருக்கு எதிராக அழுத்தங்கள் அதிகரித்திருக்கும். காங்கிரஸ் ஆட்சியில் இருந்த தால், அழுத்தங்களை சமாளிக்க முடிந்தது.

எவ்வாறாயினும் இலங்கை மக்களே நாட்டுக்கு எது நல்லது என்பதையும் 13-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதா இல்லையா என்பதை தீர்மானிப்பார்கள் எனவும் வீரவன்ஸ கூறியுள்ளார்.

இந்தியா உட்பட ஏனைய நாடுகளில் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்துள்ளன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அந்த நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

தென்னாபிரிக்கா ஏற்கெனவே இலங்கைக்கான சிறப்பு தூதுவர் ஒருவரை நியமித்துள்ளது. இந்தியாவும் இலங்கைக்கான சிறப்பு தூதுவர் ஒருவரை நியமிக்க உள்ளது.

இந்தியா, தெனனாபிரிக்கா உட்பட ஏனைய நாடுகளை கையாளும் போது உரிய முனைப்புகளுடன அரசாங்கம் செயற்பட வேண்டும் எனவும் வீரவன்ஸ கூறியுள்ளார். (எ-11)

# தமிழ் புகலிடக் கோரி...

நிகழ்வுகள் அவ்வப்போது நிகழ்ந்து வரு கின்றன.

அதிகளவு மனவழுத்தம், எதிர்காலம் குறித்த நிச்சயமின்மை, மீளவும் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவோமென்ற பயம் போன்றவை இவற்றுக்குக் காரணமாகவிருக்கின்றன.

உயிரிழந்த இளைஞனின் நண்பர்கள் கூறுகையில்,

தடுப்பு முகாமிலிருந்தே எனக்கு அவரை நன்கு பழக்கம். மிக அருமையான மனிதன். யாருக்கும் எனேரமும் உதவி செய்யும் பழக்கமுள்ளவர். சமூகத்துக்கு எம்மால் எப்போதும் பயன்பாடு இருந்து கொண்ட இருக்கவேண்டும் என கொள்கை உள்ளவர்.

மிகவும் கலகலப்பாகவும் உற்சாகமாகவுமே எப்போதும் காணப்படுவார். தடுப்பு முகாமிலிருந்து வெளியேறி சமூகத்துள் விடப்பட்டபோதும் அவர் மிக நன்றாகவே இருந்தார்.

பின்னர் காலம் போகப்போக அவரது புகலிடக் கோரிக்கை தொடர்பான சாதகமான பதில்கள் இல்லாமற் போக அவரது மனநிலை பாதிப்படையத் தொடங்கியது. அடிக்கடி தன்னைத் திருப்பி அனுப்பிவிடுவார்களோ என்ற பயத்தைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்.

ஒருகட்டத்தில் தீவிர மனவழுத்தத்துக்கு உள்ளாகிச் சிகிச்சை பெறும நிலையும் ஏற்பட்டது. அவரது சிரிப்பும் உற்சாகமும் குன்றினாலும் வழமைபோல்மற்றவர்களுக்கு உதவி செய்யும் அவரது பணி தொடர்ந்து கொண்டேதான் இருந்தது.

இந்நிலையில்அவரது தற்கொலை என்பது எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியளிக்கின்றது. தனது புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு தான் திருப்பி அனுப்பட்டு விடுவேனென்ற பயமே அவரது இந்த முடிவுக்குக் காரணமாக இருக்க முடியுமென்று நான் நம்புகிறோம் என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தினை அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் மொரிசன் உறுதிப்படுத்தியுள்ளார். (செ-11)

# வயோதி...

இதனையடுத்து, பொதுமக்கள் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர வெளிச்சவீட்டு ஒழுங்கை பருத்தித்துறையைச் சேர்ந்த ஆசீர்வாதம் தொம் மைப்பிள்ளை (வயது 77) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கடந்த 26ஆம் திகதி வீட்டைவிட்டு வெளியே சென்று காணாமல் போன நிலையில் இவரது சடலம் நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமானது பிரேதப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-60)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கணனி போதனாசிரியராக கடமையாற்றும்
கணேசு வேணுகோபன்
(B.sc, M.sc In Computer science)
29.05.2014 இல் பேராதனை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பொதுபட்டமளிப்பு விழாவில் M.sc In Computer Science பட்டம் பெற்றதையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
IIT COMPUTER CENTRE
KKS ROAD, RDS BUILDING MALLAKAM.
(6551)

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101
(C-7540)

## கிளி./ பூநகரி மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா - 2014

கிளி / பூநகரி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா 05.06.2014 (வியாழக்கிழமை) முற்பகல் 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் திரு.S.R.பாலசந்திரன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கௌரவ T.குருகுலராஜா,(கல்வி, கலாசார விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் வடமாகாண சபை) அவர்கள் கலந்துகொள்ளவுள்ளதுடன், சிறப்பு விருந்தினர்களாக திரு. K.முருகவேல் (கல்விப்பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்-கிளிநொச்சி மற்றும் திரு. S.தர்மரத்தினம் பிராந்திய கல்வி அதிகாரி பூநகரி) ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வுக்கு முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன்அழைக்கின்றோம்.

பாடசாலை சமூகம் கிளி / பூநகரி மத்திய கல்லூரி

இந்நிகழ்வுக்கான அனுசரணை
சரவணப் பொய்கை ரிரஸ்ட்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org